Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, AUGUST 25, 2021

புதன்கிழமை ஓகஸ்ட் 25, 2021 | ஒளி: 07 கதிர்: 83 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE



## முன்னாள் அமைச்சர் மங்கள காலமானார்

முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னைநாள் உறுப்பினருமான மங்கள சமரவீர, நேற்று (24) காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 65 ஆகும்.

தொடர்ச்சி P2

## சம்பளத்தில்
# துண்டு விழாது

**அரசாங்கத்தின் எந்தவோர் அரசியல்வாதியும் யோசனையை முன்வைக்கவில்லை. ஆனால், கோரிக்கைகளை விடுத்துள்ளனர்**

**பலவந்தமாக எந்தவோர் அழுத்தத்தையும் பிரயோகித்து, நிதியம் ஒன்றை உருவாக்க அரசாங்கம் முயற்சிக்காது**

மகேஸ்வரி விஜயனந்தன்

அரச மற்றும் தனியார்துறையினரின் சம்பளத்தைக் குறைக்க அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளரமான டலஸ் அழகப்பெரும இது தொடர்பாக வெளிவரும் தகவல்கள் கட்டுக்கதைகள் என்றார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (24) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மறைந்த மங்களவுக்கு அரசியல் பேதமின்றி இரங்கல்

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி, மரணமடைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு அரசியல் பேதங்களை மறந்து பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

இலங்கை அகதிகள் விவகாரத்தில்

## உணர்ச்சிபூர்வ தீர்மானத்தை ஒருபோதும் எடுக்க முடியாது

இலங்கை அகதிகள் சட்டவிரோதமாக குடியேறியவர்கள் என்பதால், அவர்களுக்கு குடியுரிமை வழங்கும் விடயத்தில் உணர்ச்சிபூர்வமாகத் தீர்மானம் எடுக்க முடியாது என இந்திய மத்திய அரசு அதிரடியாக அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2





## புத்தளத்தில் வெள்ளைக்கொடி

எம்.யூ.எம்.சனூன்

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் மறைவையிட்டு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் புத்தளம் கிளை முக்கிய உறுப்பினர்களால் புத்தளம் நகர பிரதான சுற்றுவட்டத்தில் வெள்ளைக்கொடிகள் கட்டி அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் இணைப்புச் செயலாளர் இர்ஷாத் ரஹ்மதுல்லாஹ், புத்தளம் நகர அமைப்பாளர் எம். எச். முஹம்மத், சமூக சேவகர் முஜா நிசார் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.



## சவப்பெட்டிகள் இலவசமாக விநியோகம்

கொரோனா வைரஸ் தொற்றால் மரணிப்போரை தகனம் செய்வதற்கான ஏற்பாடுகளை அத்தனகல பிரதேச சபை, இலவசமாக முன்னெடுத்துள்ளது. மரணமடைந்தவர்களுக்குத் தேவையான சவப்பெட்டியையும் அந்த சபை இலவசமாகவே வழங்குகின்றது.

தொடர்ச்சி P2

## சிறுமிகள் இருவரை கொரோனா கொன்றது

ஏ.ஏ.எம்.பாயிஸ்

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி, மூன்றரை வயதுடைய சிறுமியும், 12 வயதுடைய மற்றுமொரு சிறுமியும் மரணமடைந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## வாராந்தம் 3 இலட்சம் லீற்றர் திரவ ஒட்சிசனுக்கு அனுமதி

மகேஸ்வரி விஜயனந்தன்



தற்போது திரிபடைந்து வரும் கொரானா தொற்றால் ஒட்சிசன் தேவைப்படுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இதன்காரணமாக இறக்குமதி செய்யப்படும் ஒட்சிசனின் அளவை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2



## யாசகர்களுக்கு தடுப்பூசி

கொழும்பிலிருக்கும் பெரும் எண்ணிக்கையிலான யாசகர்களுக்கு கொரோனா தடுப்பூசியை செலுத்தும் செயற்றிட்டத்தின் கீழ், டாம் வீதி பொலிஸாரும் கொழும்பு மாநகர சபையின் சுகாதாரப் பிரிவும் இணைந்து நேற்று (24) யாசகர்களுக்குத் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டது. அவர்களுக்கு சினோ.ஃபாம் தடுப்பூசி செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (படம்: பிரதீப் பத்திரண)

## கூட்டணி அரசாங்கம் நோயாளி ஆகவில்லை

மகேஸ்வரி விஜயனந்தன்



உலகில் எந்தவொரு கூட்டணி அரசியலிலும் பல்வேறு கருத்து மோதல்கள், கருத்துகள், யோசனைகள் காணப்படும் எனத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான டலஸ் அழகப்பெரும, எமது உள்ளக நெருக்கடி தொடர்பில் பேசுமளவுக்கு எமது அரசாங்கம் நோயாளி ஆகிவிடவில்லை என்றார்.

தொடர்ச்சி P2

## கொரோனா மரணங்களை மேற்பார்வை செய்யக் குழு



மேல் மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட சில வைத்தியசாலைகளில் பதிவாகும் மரணங்கள் மேற்பார்வை செய்யப்படவுள்ளன.

இதற்கென, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் சிலர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு தேசிய, ராகம போதனா, களுபோவில போதனா, பாணந்துறை, களுத்துறை ஆகிய வைத்தியசாலைகளுக்கே அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்த வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட கொரோனா தொற்றாளர்கள், கொரோனா தொற்றால் உயிரிழப்போர் தொடர்பில் சமூக வலைத் தளங்களில் பொய்யான தகவல்கள் பகிரப்படுகின்றன.

தொடர்ச்சி P2



## பஸ்களுக்கு நிவாரணம்

வருமானத்தை இழந்துள்ள பஸ் உரிமையாளர்கள், ஊழியர்களுக்கு அடுத்த வாரம் முதல் நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது. இதற்குத் தேவையான இறுதிக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சகல மதங்களை சேர்ந்த குருமாருக்கு ஓர் அறிவிப்பு

சகல மதங்களைச் சேர்ந்த 60 வயதுக்கு மேற்பட்ட தலைவர்களும் கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுமாறு புத்தசாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

## கொரோனா மரணங்கள் 190

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை நேற்று முன்தினம் (23) 190 ஆக அதிகரித்திருந்தது. கொரோனா தொடர்பான நாட்டின் மொத்த மரணங்களின் எண்ணிக்கை 7,750 என அறிவிக்கப்பட்டுள்ளது.

## தனி வழி செல்கிறார் மைத்திரி

கொவிட்-19 நிதியத்துக்கு ஒத்துழைக்கும் வகையில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எம்.பிக்கள், தலா ஒரு இலட்சம் ரூபாய் என்ற அடிப்படையில் நிதியத்துக்கு அர்ப்பணிப்பு செய்துள்ளனர். நிதியத்துக்கான நிதியை திரட்டும் திட்டம், கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில், கட்சியின் தலைமையத்தின் நேற்று (24) முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2



## ஜானகவுக்கு கொரோனா

கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புரவுக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

தொடர்ச்சி P2



## எனது சம்பளத்தை கொடுக்கமாட்டேன்



என்னுடைய எம்.பி பதவிக்கு கிடைக்கும் மாதாந்த சம்பளத்தை, கொவிட்-19 நிதியத்துக்கு வழங்கமாட்டேன் என்று தெரிவித்துள்ள கல்வி இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த, தனது ஒரு மாத சம்பளத்தை விடவும் பெருந்தொகையைச் சேகரித்து கொடுக்க முடியும் என்றார்.

கொவிட்-19 நிதியத்துக்கு தங்களுடைய எம்.பி பதவிக்காக கிடைக்கும் ஒருமாத சம்பளத்தை, (ஓகஸ்ட் மாதத்துக்குரியது) வழங்குமாறு முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியிருந்தது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில், கூடிய இவ்வாரத்துக்கான அமைச்சரவைக் கூட்டத்தின்போது, பிரதமரே அந்த யோசனையை முன்வைத்திருந்தார்.

தொடர்ச்சி P2

# ‘கடித’ பங்காளிகளுக்கு
## அமைச்சர்கள் விசனம்

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக, நாட்டை முடக்குமாறு கோரி அரசாங்கத்தின் பங்காளி கட்சிகளில் 10 பங்காளிகள், ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில், அமைச்சர்கள் மூவரும் கையொப்பம் வைத்தமை தொடர்பில், அமைச்சரவையில் கடும் விமர்சனம் முன்வைக்கப்பட்டது.

வாராந்த அமைச்சரவை சந்திப்பு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெறும். எனினும், கண்டி எசல பெரஹராவின் இறுதிநாள் பெரஹராவுக்கு ஜனாதிபதி தனது பாரியாருடன் சென்றிருந்தார்.

**“ அமைச்சர்களான ரோஹித அபேகுணவர்தன, எஸ்.எம். சந்திரசேன, டக்ளஸ் தேவானந்தா ஆகிய மூவரும், அமைச்சரவைக் கூட்டத்தின் போது கருத்துகளைத் தெரிவிக்காது, வெளியில் சென்று ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியமை, அமைச்சரவைக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதை காண்பிக்கும் செயற்பாடாகும்**

இந்நிலையில், நேற்றுமுன்தினம் (23), பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலேயே அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# பஸ்களுக்கு நிவாரணம்

வாகன உதிரிப்பாகங்கள், பெற்றரிகள், டயர்கள், எண்ணெய் வகைகள் மற்றும் காப்புறுதி, லீசிங் கட்டணங்களுக்கான ஒரு தொகை பணத்திற்குரிய வவுச்சர்கள் வழங்கப்படவுள்ளது என்றும் அவர் கூறினார்.

இதனை தவிர, வருமானம் இழந்துள்ள பஸ் ஊழியர்கள் தங்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருள்களை பெற்றுக்கொள்வதற்குரிய பணத்துக்கான வவுச்சர்களும் வழங்கப்படவுள்ளது எனத் தெரிவித்த அவர், இந்த நிவாரண செயற்றிட்டம் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும் என்றார்.

# கொரோனா மரணங்களை மேற்பார்வை செய்ய குழு

இந்நிலையிலேயே உதவி பொலிஸ் அத்தியட்சகர்களை மேற்பார்வை நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் கூறினார்.

வைத்தியசாலை பொலிஸ் காவலரண்களின் நடவடிக்கைகளை உரிய முறையில் முன்னெடுத்து செல்வதற்காக இந்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார்.

# சகல மதங்களை சேர்ந்த குருமாருக்கு ஓர் அறிவிப்பு

சகல பிரதேச செயலாளர் காரியாலயங்கள் மட்டத்தில் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதுவரையிலும் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளதா மதத் தலைவர்கள் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தடுப்பூசியை பெற்றுக்கொள்வது தொடர்பில் ஏதாவது பிரச்சினைகள் இருக்குமாயின், அவைத்தொடர்பில் கீழ் கண்ட தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்குமாறும் அமைச்சு கோரியுள்ளது.

பௌத்த மத தேரர்கள் - 076-5481781 அல்லது 0778514039

இந்து மத குருமார்கள் -071-4471128

மௌலவிமார்கள் - 076-1395362

கிறிஸ்தவ பாதிரியார்கள்- 071-4061132

# ஜானகவுக்கு கொரோனா

ஆகையால், தன்னுடன் நெருங்கி பழகியவர்கள், தங்களை சுயதனிமைக்கு உட்படுத்திக்கொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# உணர்ச்சிபூர்வ தீர்மானத்தை ஒருபோதும் எடுக்க முடியாது

இந்த விடயம் தொடர்பில் சட்டத்திற்குட்பட்டே தீர்மானங்களை எடுக்க முடியும் என இந்திய மத்திய அரசு சார்பில் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அகதிகளுக்கான குடியுரிமை வழங்குவது தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையால் ஏற்கெனவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நடைமுறைப்படுத்தாமைக்கு எதிராக மற்றுமொரு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனினும், குறித்த மனுவுக்கு எதிராக இந்திய அரசு தரப்பில் மற்றுமொரு எதிர்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுவின் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை அகதிகளுக்கு உரியவாறு அறிவித்தல் கிடைக்காமையால் வழக்கு விசாரணையை நீதிபதிகள் குழாம் ஒத்திவைத்துள்ளது.

மூன்று வாரங்களுக்கு மனு மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளதுடன், பிரதிவாதிகளுக்கு அறிவித்தலை அனுப்புமாறும் உத்தரவிட்டுள்ளது.

திருச்சி, கொட்டப்பட்டு இலங்கை அகதிகள் முகாமை சேர்ந்த பலரால் தங்களுக்கு இந்திய குடியுரிமை வழங்க உத்தரவிட வேண்டும் என கோரி, 2009 ஆம் ஆண்டு உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு கடந்த 2019 ஆம் ஆண்டு விசாரணை செய்யப்பட்டது.

மனுதாரர்கள் அனைவரும் குடியுரிமை கோரி, திருச்சி மாவட்ட ஆட்சியரிடம் புதிதாக விண்ணப்பிக்கவும், அந்த விண்ணப்பங்களை திருச்சி மாவட்ட ஆட்சியர் மத்திய அரசுக்கு தாமதம் இன்றி அனுப்பி, உரிய நடவடிக்கை எடுக்கவும் வேண்டும் என நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை முறையாக நிறைவேற்றாத அதிகாரிகள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது.

நிலுவையிலுள்ள இந்த வழக்குக்கு எதிராகவே இந்திய அரசினால் மற்றுமொரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி சஞ்சீப் பானர்ஜி மற்றும் நீதிபதி துரைச்சாமி ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (23) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது இதன்போதே மேற்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

# துண்டு விழாது

தொடர்ந்து தெரிவித்த அவர், அரச மற்றும் தனியார்துறையினரின் மாதாந்த சம்பளத்தை குறைக்குமாறு, அரசாங்கத்தின் எந்தவோர் அரசியல்வாதியும் யோசனையை முன்வைக்கவில்லை என்றும் ஆனால் பல தரப்பினரும் கோரிக்கைளை விடுத்துள்ளனர் என்றார். கொரோனா நிதியம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து சகல அமைச்சரவை அமைச்சர்களும் தமது சம்பளத்திலிருந்து 10,000 ரூபாயை அன்பளிப்பு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

எனவே, பலவந்தமாக எந்தவோர் அழுத்தத்தையும் பிரயோகித்து நிதியம் ஒன்றை உருவாக்க அரசாங்கம் முயற்சிக்காது. எனவே சம்பளம் குறைப்பு தொடர்பில் வெளியான அனைத்து தகவல்களையும் தான் பொறுப்புடன் நிராகரிப்பதாகத் தெரிவித்தார்.

## எனது சம்பளத்தை கொடுக்கமாட்டேன்

அந்த யோசனையை உடனடியாகவே நிராகரித்த இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த, தனது சம்பளம் கடனுக்கே கழிக்கப்பட்டுவிடுகின்றது என்றார். ஏனைய எம்.பிக்கள் தங்களுடைய மாதச் சம்பளத்தை அர்ப்பணிப்பாளர்கள். ஆனால், தன்னால் அப்படி செய்யமுடியாது. சம்பளத்தை நிவாரணமாக வழங்குவதற்கு பதிலாக, அதற்கு தேவையான சேவைகளைச் செய்வேன் என்றார். மக்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியிலேயே ஒவ்வொருவரையும் பாராளுமன்றத்துக்கு அனுப்பியுள்ளனர். அவர்களுக்கு சேவை யாற்றவேண்டும். கொவிட்-19 நிதியத்துக்கு நிதியைத் திரட்ட வேண்டும். அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. நல்லதொரு செயற்றிட்டம். ஆனால், நிதியத்துக்கு நிதியைத் திரட்டுவதற்கு சகலரும் அர்ப்பணிக்க வேண்டும். எனது ஒருமாத சம்பளத்தை விடவும் பெரும் தொகையில் நிதியைத் திரட்டி தரமுடியும் என்றார்.

## தனி வழி செல்கிறார் மைத்திரி

ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையை மைத்திரிபால சிறிசேன வழங்கினார். ஏனையோர், தங்களுடைய காசோலைகளை கட்சியின் பொருளாளர் லசந்த அழகியவண்ணவிடம் வழங்கினர்.

இதுதொடர்பில் வங்கிக் கணக்கும் திறக்கப்பட்டுள்ளது.

மக்கள் வங்கி சுதுவெல்ல கிளையிலேயே 143100150009171 எனும் கணக்கிலக்கத்தில் அந்தக் கணக்கு திறக்கப்பட்டுள்ளது.

கட்சியின் அனைத்து அமைப்பாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், தொழிற்சங்கவாதிகள் மற்றும் சர்வதேச அளவில் உள்ள ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி கிளை சங்க உறுப்பினர்கள் இந்த நிதிக்கு முடிந்தவரை பங்களிப்பு செய்யுமாறு கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன கேட்டுக்கொண்டுள்ளார்.

> **மக்கள் வங்கி சுதுவெல்ல கிளையில் 143100150009171 எனும் கணக்கிலக்கத்தில் கணக்கு திறக்கப்பட்டுள்ளது**

# சிறுமிகள் இருவரை கொரோனா கொன்றது

இவ்விரு கொரோனா தொற்று மரணங்களும் பலாங்கொடை மற்றும் இராஜகிரிய ஆகிய இடங்களிலேயே இடம்பெற்றுள்ளன.

பலாங்கொடை- மாரதென்ன, தெதனகல பிரதேசத்தில், மூன்றரை வயதான விக்னேஸ்வரன் சாதுக்ஷா என்ற சிறுமி கொரோனா தொற்றுக்கு உள்ளான நிலையில் மரணமடைந்துள்ளார்.

சுகவீனம் காரணமாக மாரதென்ன தோட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமடைந்துள்ளார். அதன்பின்னர் பலாங்கொடை அரச வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது, சிறுமிக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இராஜகிரிய, கல்பொத்த பகுதியைச் சேர்ந்த 12 வயதான அபிமானி நவோதயா சேரசுந்தர எனும் சிறுமியும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி மரணமடைந்துள்ளார்.

திடீரென சுகவீனமடைந்த சிறுமி, கொழும்பு ரிஜ்வே ஆர்யா சிறுவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்கு கொரோனா வைரஸ் தொற்றிருப்பது உறுதிசெய்யப்பட்டது. அதன்பின்னர் மரணமடைந்துள்ளார்.

## திருக்கோவிலில் நடமாடியோருக்கு தொற்று

வி.சுகிர்தகுமார்

தனிமைப்படுத்தல் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையிலும் தேவையற்ற விதத்தில் வீதிகளில் நடமாடிய 26 பேர் கொரோனா தொற்றுடையவர்களாக திருக்கோவில் பிரதேசத்தில் நேற்று (24) அடையாளம் காணப்பட்டனர். 152 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையின் போதே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

திருக்கோவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் பி.மோகனகாந்தன் தலைமையில் பொலிஸாரும் இராணுவத்தினரும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இணைந்து மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையின் போதே தொற்றாளர்கள் கண்டு பிடிக்கப்பட்டனர்.

திருக்கோவிலில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துவரும் நிலையில் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

# சவப்பெட்டிகள் இலவசமாக விநியோகம்

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மரணிப்போரின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கடுமையான பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். இருப்பவர்கள், இல்லாதவர்கள் என்ற பேதங்களின்றி சகலரும் பாதிக்கப்படுகின்றனர். ஆகையால், அவர்களுக்கு உதவும் வகையிலேயே அவ்வாறான சடலங்களை இலவசமாக அடக்கும் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என அத்தனகல பிரதேச சபையின் தவிசாளர் பிரியந்த புஷ்பகுமார தெரிவித்தார்.

குறைந்த வருமானங்களைப் பெறுகின்றவர்களும் சவப்பெட்டியை கொள்வனவு செய்யும் போது உதவியற்றவர்களாக நிற்கின்றனர். இந்நிலைமையில், வத்துப்பிட்டிவல வைத்தியசாலையில், மரணிப்போருக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருந்தால். அவர்களின் உடல்களை இலவசமாக தகனம் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம் என்றார்.

சவப்பெட்டி உற்பத்திக்காக சபையின் நிதியை பயன்படுத்த மாட்டோம். நன்கொடையாளர்கள் சிலர், பலகைகளை இலவசமாக தருகின்றனர். சபையில் இருக்கும் எங்களுடைய பணியாளர்களின் அர்ப்பணிப்பில் சவப்பெட்டிகளை தயாரித்து இலவசமாக வழங்குகின்றோம் என்றார்.

# மறைந்த மங்களவுக்கு அரசியல் பேதமின்றி இரங்கல்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகபெரும, ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, மனோகணேசன் ஆகியோரும் அனுதாபங்களை அனுப்பிவைத்துள்ளனர்.

இதேவேளை, சமூக அமைப்புகளும் ஊடக அமைப்புகளும், சிவில் பிரதிநிதிகள் உள்ளிட்ட இன்னும் பலரும், தங்களுடைய அனுதாபங்களை அனுப்பிவைத்துள்ளனர்.

# கூட்டணி அரசாங்கம் நோயாளி ஆகவில்லை

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (24) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், அண்மையில் அமைச்சரவை சந்திப்பு முடிந்த பின்னர் வெளியே வந்து நாட்டை முடக்குமாறு கடிதம் அனுப்பியமை தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், இது இந்த நாட்டில் மாத்திரமல்ல. உலகில் எந்தவொரு கூட்டணி கட்சிகளுக்குள் இருக்கும் பொது பண்பு. பல்வேறு கருத்தாடல்கள் இடம்பெறுவதன் ஊடாக, கூட்டணி அரசியலின் ஆரோக்கியத்துக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாதென்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் அரசியல் வரலாற்றில் பல்வேறு உரையாடல்கள் இடம்பெறுகின்றமை புதிய விடயமல்ல என தெரிவித்த அவர், எதிர்காலத்திலும் இவ்வாறான உரையாடல்கள் இடம்பெறும். எனவே உள்ளக நெருக்கடியை பேசும் அளவுக்கு அரசாங்கம் நோயாளியாகிவிடவில்லை என்றும். இது ஆரோக்கியமான அரசாங்கம் என்றும் சுட்டிக்காட்டினார்.

# வாராந்தம் 3 இலட்சம் லீற்றர் திரவ ஒட்சிசனுக்கு அனுமதி

இதற்கமைய, மாதாந்தம் 1,20,000 லீற்றர் திரவ ஒட்சிசன் இறக்குமதிக்கு இந்த வருடம் மே மாதம் 24ஆம் திகதி அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்த நிலையில், தற்போது தொற்றின் வேகம் அதிகரித்துள்ளதால் ஒட்சிசனின் தேவையும் அதிகரித்துள்ளது.

எனவே, போதுமானளவு ஒட்சிசனை நாட்டில் களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக, வாராந்தம் மூன்று இலட்சம் லீற்றர் திரவ ஒட்சிசனை இறக்குமதி செய்ய சுகாதார அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதேவேளை நாட்டில் ஒட்சிசன் தட்டுப்பாடு ஏற்படவில்லை என அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ரமேஸ் பத்திரண தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (24) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போதுமானளவ ஒட்சிசன் கையிருப்பில் இருந்தாலும் ஒட்சிசன் பயன்பாட்டின் தேவை அதிகரிப்பதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிப்பதால் நாட்டுக்கு தேவையான மேலதிக ஒட்சிசனை வாராந்தம் இறக்குமதி அரசாங்கம் தீர்மாணித்தது என்றார்.

எவரும் பயப்பட தேவையில்லை எனதெரிவித்த அவர், அவசர தேவைக்காக இந்தியா ஒட்சிசனை வழங்கியுள்ளதால் ஒட்சிசன் தொடர்பில் அச்சம் வேண்டாம் என்றார்.

# முன்னாள் அமைச்சர் மங்கள காலமானார்

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி ஒகஸ்ட் 18ஆம் திகதியன்று கொழும்பு நாரஹேன்பிட்டியவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர், அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார். அவருடைய உடல்நிலை தேறிவருவதாக தகவல்கள் வெளியாகியிருந்த நிலையிலேயே அவர் மரணமடைந்துள்ளார்.

மாத்தறையை பிறப்பிடமாகக் கொண்ட மங்கள சமரவீர, கொழும்பு ரோயல் கல்லூரியின் பழைய மாணவர் ஆவார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து அரசியலுக்குள் நுழைந்த அவர், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் கட்சியை உருவாக்கினார். அதன்பின்னர். ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்துகொண்டார்.

கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடாக வேட்புமனுத்தாக்கல் செய்திருந்த அவர், அரசியலில் இருந்தே ஓய்வுபெறுவதாக அறிவித்து, இறுதிநேரத்தில் வேட்புமனுவை வாபஸ் பெற்றுக்கொண்டார்.

வெளிநாட்டலுவல்கள், ஊடகம் மற்றும் நிதியமைச்சராக பதவிகளை வகித்த அவர், அரசியலில் இருந்து ஓய்வு பெற்றதன் பின்னர், நகைச்சுவை நாடகமொன்றில் பிரதான கதாபாத்திரத்தை ஏற்று நடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் மறைவுக்கு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பலர், உறுப்பினர்கள், பொது நிறுவனங்கள், அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் என பலரும் தங்களுடைய அனுதாபத்தை தெரிவித்துள்ளனர்.

அன்னாரது இறுதி கிரியைகள், பொரளை பொதுமயானத்தில் நேற்று (24) மாலையே இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# ‘கடித’ பங்காளிகளுக்கு அமைச்சர்கள் விசனம்

அதன்பிபோது, அமைச்சர்களான ரோஹித அபேகுணவர்தன, எஸ்.எம். சந்திரசேன மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகிய மூவரும், கையொப்பமிட்ட மூன்று அமைச்சர்களின் செயற்பாடுகளையும் கடுமையாக விமர்சனத்துக்கு உட்படுத்தினர்.

நாட்டை முடக்குமாறு 10 பங்காளி கட்சிகளால் அனுப்பப்பட்ட அந்தக் கடிதத்தில், அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோரே கையொப்பமிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சரவைக் கூட்டத்தின் போது கருத்துகளை தெரிவிக்காது, வெளியில் சென்று ஜனாதிபதிக்கு கடிதம் எழுதுவது அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பை இல்லாதொழிக்கும் செயற்பாடாகுமென விமர்சனங்களை முன்வைத்த மூன்று அமைச்சர்களும் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தலைமையில் கடந்த 17 ஆம் திகதியன்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தின் போது, நாட்டை முடக்காமல் இருக்கவே தீர்மானிக்கப்பட்டது. அதற்கு ஆமோதித்த அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், வெளியில் சென்று கடிதம் எழுதியமை, அமைச்சரவைக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதை காண்பிக்கும் செயற்பாடாகும் என்றும் விமர்சனங்களை முன்வைத்த அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

## காத்திருப்பு






கொழும்பு, பண்டாரநாயக்கபுர பகுதியில், சுகாதார அதிகாரிகளால் நேற்றை தினம் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பி.சி.ஆர் பரிசோதனைகளை செய்துகொள்வதற்காக, பெருந்திரளான மக்கள் காத்திருந்தனர். (படம்: பிரதீப் தில்ருக்ஷண)

கொரோனாவைக் கட்டுப்படுத்தும் பணிகளை

# இரு தரப்பும் குழப்புகின்றன



எதிர்க்கட்சியும் நாட்டின் தொழிற்சங்கங்களும் இணைந்து, நாட்டை முடக்க வேண்டுமெனக் கூறி, கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தும் பணிகளைக் குழப்பும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாக அமைச்சர் காமினி லொக்குகே குற்றம் சுமத்தியுள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து கருத்துரைத்த அமைச்சர், ஆடைத் தொழிற்சாலைகளை மூட வேண்டுமெனச் சிலர் கூறிவந்தாலும், அரசாங்கம் மிகவும் கவனமாக ஏற்றுமதிச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாகவும், அரச, தனியார் ஊழியர்கள், நாளாந்தம் தொழில் செயற்பாடுகளை முன்னெடுப்போரையும் பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியால் நாடுமுழுவதிலும் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களே கொரோனா வைரஸ் பரவலுக்குக் காரணம். இவர்கள் அனைவரும் நாட்டுக்காக செயற்படுகிறார்களா? அல்லது, தங்களது அரசியலை முன்னிறுத்திச் செயற்படுகிறார்களா எனவும் அவர் இதன்போது கேள்வி எழுப்பினார்.

பொருளாதாரம் வீழ்ந்தால் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த முடியாத நிலைக்கு நாடு செல்லும். நாட்டு மக்கள் அனைவருக்கும் தடுப்பூசியை வழங்கும் செயற்பாடுகளை ஜனாதிபதி தொடர்ந்து முன்னெடுத்து வருகிறார்.

நாட்டில் தொழிற்சங்கங்கள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர். உண்மையில் போராட்டங்களை முன்னெடுப்பது தொழிற்சங்கங்களா அல்லது எதிர்க்கட்சியினரா என்கிற சந்தேகம் ஏற்படுவதாகவும் தெரிவித்தார்.

நாட்டை முடக்கக் கூடாதென அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டபோது அமைச்சரவையில் இருந்தவர்கள் அமைதியாக இருந்துவிட்டு, வெளியில் சென்று நாட்டை முடக்க வேண்டுமென ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியதாகவும் தெரிவித்தார்.

## முடக்கத்தின் முடிவுக்கு இருவாரங்கள் செல்லும்’

நாடு முடக்கப்பட்டமைக்கான பிரதிபலன் கிடைக்க குறைந்தது இரு வாரங்கள் செல்லுமென ராகம வைத்திய பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் அர்ஜுன டி சில்வா தெரிவித்துள்ளதோடு, தொற்றாளர்கள் எண்ணிக்கை, உயிரிழப்போர் எண்ணிக்கை தொடர்பில் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த அவர், நாடு முடக்கப்பட்டிருந்தாலும் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள், தொற்றால் இறப்போரின் எண்ணிக்கை குறையாதிருப்பது தொடர்பில் குழப்படையவோ, மனதளவில் சோர்வடையவோ அவசியம் இல்லை. நாட்டை முடக்கியமைக்கான பிரதிபலன் கிடைக்க குறைந்தது இரு வாரங்கள் செல்லும் எனவும் தெரிவித்தார்.

நாட்டை முடக்கியமைக்கான பிரதிபலன்கள் இன்று நாளையும் கிடைக்குமென எதிர்பார்க்கக்கூடாது எனவும், ஊரடங்கு சட்டத்தில் வீடுகளை விட்டு மக்கள் வெளியேற வேண்டாம் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் தற்போது செலுத்தப்படும் தடுப்பூசிகள் அனைத்தும் சுகாதாரத் தரப்பினரால் அனுமதிக்கப்பட்டது. எனவே தடுப்பூசிகளை தேர்ந்தெடுக்காது கிடைக்கும் தடுப்பூசிகளை செலுத்திக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

காதலியின் கைப்பையை அபகரித்த

## காதலனும் நண்பர்களும் கைது

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ள நிலையில், காதலியின் கைப்பையை அபகரித்துச் சென்ற காதலனும் அவரது நண்பர்கள் இருவரும் உடுகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் சுதுவெலிபொத பகுதியைச் சேர்ந்த 20 வயதுயை பெண்ணொருவர் ஒரு மாதத்துக்கு முன்பு உடுகமக, உக்ஔவிட பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய ஓட்டோ சாரதியுடன் காதல் வயப்பட்டுள்ளார்.

எனினும் இருவருக்கும் இடையில் பிரச்சினைகள் ஏற்பட, சில நாள்களுக்குள்ளேயே காதல் முறிவடைந்துள்ளது. இதனால், காதலியின் மேல் கோபத்திலிருந்த காதலன், அவர் வேலைக்குச் செல்லும்போது ஓட்டோவில் சென்று கடத்த முயற்சி செய்துள்ளார்.

எனினும், கடத்தல் முயற்சி தோல்வியடைந்ததால் காதலியின் கைப்பையை அபகரித்துகொண்டு தப்பியோடியுள்ளார்.

கைப்பையுடன் தப்பியோடியவரை தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டின் கீழ் சோதனைச் சாவடியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அரசாங்கமும் ஜனாதிபதியும்

## மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும்



கொரோனா வைரஸ் தொற்றால் நாட்டில் பாரியளவில் உயிரிழப்புகள் ஏற்படுவதற்கு அரசாங்கமே காரணமெனத் தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார, ஜனாதிபதி உள்ளிட்ட முழு அரசாங்கமும் இதற்காக நாட்டு மக்களிடம் மன்னிப்புக்கோர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார, உரிய நேரத்தில் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளாமை, நாட்டை முடக்கி பொதுமக்களைப் பாதுகாக்காததாலேயே கொரோனா வைரஸ் தொற்றாளர்கள், தொற்றுக்குள்ளாகி உயிரிழப்போரின் எண்ணிக்கை பாரியளவில் அதிகரித்தமைக்குக் காரணமெனவும் தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றிய ஜனாதிபதி இதுதொடர்பில் கவலையையோ அல்லது நாட்டு மக்களிடம் மன்னிப்பையோ கேட்கவில்லை. அரசாங்கத்தின் அசமந்தச் செயற்பாடுகளால் நாட்டில் பரவிவரும் கொரோனா வைரஸ் தொடர்பில் ஜனாதிபதி உள்ளிட்ட முழு அரசாங்கமும் நாட்டு மக்களிடையே மன்னிப்புக் கேட்க வேண்டும்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் கண்ணீரை விற்று, ஆட்சிக்கு வந்த அரசாங்கம், தாக்குதலின் சூத்திரதாரிகளை தண்டிப்பதாகக் கூறியிருந்த போதிலும், ஆட்சிக்குவந்த 28 வாரங்கள் கடந்தும் சூத்திரதாரிகளை தண்டிக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் சூத்திரதாரி தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஷானி அபேசேகரை கைது செய்து சிறையில் அடைத்தார்கள். தங்களால் அனுமதிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டாமென பொலிஸார் மகாநாயக்க தேரர்களிடம் சீருடையில் சென்று அழுத்தங்களை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு இல்லை எனக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், கொரோனா வைரஸால் நாட்டில் 200 பேர் நாளாந்தம் உயிரிழக்கும்போது அதுதொடர்பில் பொறுப்புக்கூறுவதில்லை எனவும் தெரிவித்தார்.

## “நண்பன் மங்களவுக்கு கண்ணீருடன் விடை தருகிறேன்”



‘வெள்ளை வான் கடத்தல்காரர் பக்கத்திலிருந்து, கடத்தப்படுவோர் பக்கத்துக்கு நல்வரவு! 2007இல் பாராளுமன்றத்தில் அரசாங்க பக்கமிருந்து எதிரணி பக்கம் நீங்கள் வந்த போது, நான் அனுப்பிய இக்குறிப்பு ஞாபகமிருக்கின்றதா? மீண்டும் சந்திக்கும் வரை கண்ணீருடன் விடை பெறு நண்பா’, என முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீரவின் மறைவு தொடர்பில் மிக உருக்கமான டுவீட்டர் செய்தியை தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் விடுத்துள்ளார்.

முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீரவின் மறைவு தொடர்பில் மனோ எம்பி மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

2005-2009 வரை, கொழும்பில் அடைக்கலம் புகுந்திருந்த வடக்கு, கிழக்கு தமிழர்கள், அதிகாரமிக்க வெள்ளை வான் கடத்தல் பயங்கரவாத கும்பலால் ‘முனிசிபலிட்டி நாய்களை’ பிடிப்பதை போல, பிடித்து, கடத்தப்பட்டு, கொல்லப்பட்டு, பற்றைகளில் சடலங்களாக வீசப்பட்டுக் கொண்டிருந்த காலம். அதன்போது, கொழும்பு எம்.பியாக நான் ‘வருவது வரட்டும்’ என போராடிக் கொண்டிருந்த வேளை, மங்கள சமரவீர எனக்கு இரகசியமாக செய்தி அனுப்பினார்.

மங்கள சமரவீர ஊடக அமைச்சராக இருந்த வேளை, “தானும், ஸ்ரீபதி சூரியராச்சியும் அரசில் இருந்து விலக உள்ளதாகவும், அதுபற்றி தான் ஜனாதிபதிக்கு எழுதும் கடிதத்தில், மனித உரிமை மீறல், வெள்ளை வான் கடத்தலையும் ஒரு காரணமாகக் கூற உள்ளதாகவும், அதுபற்றிய விவரங்களைத் தர முடியுமா?” என கேட்டிருந்தார்.

மங்கள சமரவீரவின் இந்த இரகசிய செய்தி, கொலைக்கார சூழலில், கடத்தல்கார கடலில் தத்தளித்து, ஒரு சிறு துரும்பு கிடைக்காதா என ஏங்கிக்கொண்டிருந்த எனக்கு படு உற்சாகத்தை தந்தது. அவருக்கு தகவல்களை அனுப்பினேன்.

மங்கள சமரவீர சொன்னதைபோல், அரசில் இருந்து விலகும் தீர்மான காரணங்களை ஜனாதிபதிக்கு தெரிவித்த கடிதத்தில் வெள்ளை வான் கடத்தல், மனிதவுரிமை மீறல் என்பவற்றையும் காரணமாகக் கூறி இருந்தார். பின்னர் 2007ஆம் ஆண்டு ஜூன் 15 திகதியன்று பாராளுமன்றத்தில் அரசு பக்கம் இருந்து எதிரணி பக்கம் அவர் வந்து அமர்ந்தார். அவர் வரப்போவதை அறிந்த நான் சில நிமிடங்களுக்கு முன், “வெள்ளைவான் கடத்தல்காரர் பக்கத்திலிருந்து கடத்தப்படுவோர் பக்கத்துக்கு நல்வரவு”! என்று என் கையால் எழுதிய சிறு குறிப்பை அவருக்கு அனுப்பினேன். அதை வாசித்து என்னை பார்த்து மங்கள சமரவீர கையை காட்டி, சிரித்தது இன்னமும் என் கண்களில் நிழலாடுகிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.

பேருவளை சுகாதார பிரிவில்

## கொரோனா தடுப்பூசி செலுத்த ஆவலுடன் மக்கள் சென்றனர்

பேருவளை சுகாதார பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வதியும் அதிகமானோர் ஆவலுடன் சென்று தடுப்பூசியை செலுத்திக்கொண்டதாக பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தெரிவித்தார்.

பேருவளை தொகுதியில் பல பிரதேசங்களிலும் கொரோனா தடுப்பூசி வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கொரோனா தடுப்பூசி நிகழ்வை ஏற்பாடு செய்த பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் ‘கொவிட்டற்ற பேருவளை நகரம்’ எனும் திட்டத்தை கடந்த 09 தினங்களாக பேருவளை டீ.எஸ். சேனநாயக்க தேசிய பாடசாலையில் நிகழ்த்தி வருகிறார்.

இதன்போது,கொரோனா தடுப்பூசியை இதுவரை சுமார் 19,000 க்கும் மேற்பட்டோர் செலுத்திக் கொண்டதாகவும் தெரிவித்த நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் மபாஸ் மஷ்ஹூர், சுமார் 15,000 பேர் முதல் டோஸையும் 4,000 பேர் இரண்டாவது டோஸையும் பெற்றுக்கொண்டதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, இப்பிரதேசத்தைச் சேர்ந்த விசேட தேவையுடையோர்கள், வயதானோர், நோய்களுக்கு சிகிச்சை பெறுவோர் போன்றோர் கலந்துகொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.



வரையறைகளுக்கு உட்பட்ட

## தேசிய மீலாத் போட்டிகள்

### முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு

பெருமானார் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் பிறந்த தினத்தை முன்னிட்டு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் தேசிய ரீதியாக வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் தேசிய மீலாத் போட்டி நிகழ்ச்சிகளை தற்போது நாட்டில் நிலவும் கொரோனா அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு சில வரையறைகளுக்கு உட்பட்டதாக இவ்வருடம் (2021) நடாத்துவதற்கு திணைக்களம் தீர்மானித்துள்ளது.

கிராஅத், சிங்கள பேச்சு, தமிழ் பேச்சு, ஆங்கில பேச்சுப் போட்டிகள். திறந்த கவிதை போட்டி. அதான் போட்டி, ‘அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இப் பிரபஞ்சத்துக்கே ஓர் அருட்கொடையாவார்கள்’ எனும் கருப்பொருளில் ஒரு காணொளி போட்டி நிகழ்ச்சியினையும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன. பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் தங்களது ஆக்கங்களை (கிராஅத், சிங்கள பேச்சு, தமிழ் பேச்சு, ஆங்கில பேச்சுப் போட்டிகள், திறந்த கவிதை போட்டி, அதான் போட்டி மற்றும் காணொளி போட்டி (Vidio Compertion) நிகழ்ச்சிகளுக்கான விண்ணப்பப்படிவத்தினையும் அந்தந்தப் போட்டிகளுக்கான விதிமுறைகள், ஒவ்வொரு போட்டிகளுக்கான (Google link) உட்பட போட்டி பற்றிய முழுமையான விவரங்களையும் அறிந்து கொள்ள, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் Website : www.muslimaffairs.gov.lk என்ற இணைய முகவரி உடாக அல்லது DMRCASrilanka என்ற முகநூல் முகவரி ஊடாகவும் பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

இப்போட்டி நிகழ்ச்சிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் செப்டம்பர் 20 ஆம் திகதியாகும் எனவும் இறுதித் திகதிக்கு முன்னர் தங்களது ஆக்கங்களுக்குரிய போட்டிக்கான, கொடுக்கப்பட்டுள்ள (Google link) இல் பதிவேற்றம் செய்யுமாறும் நிகழ்ச்சிகளுக்கான ஒருங்கிணைப்பாளர் எம்.எம். முப்தி முர்ஸி தெரிவித்தார்.

## அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தில் கைவைக்காதீர்

அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தில் அரசாங்கம் கைவைக்கக்கூடாதென தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார், தற்போதைய அரசாங்கம் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை ஒரு சதத்தாலும் அதிகரிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார், நாடு தொடர்ந்து முடக்கப்பட்டிருந்தால் நாட்டு மக்கள் பாரிய அர்ப்பணிப்புக்களை செய்ய வேண்டுமென ஜனாதிபதி கூறி வருகிறார். இது எமக்கு தெரியும். அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டுமென்றே நாம் தொடர்ந்து கூறி வருகிறோம் எனவும் தெரிவித்தார்.

### சட்டத்தரணி கௌரிசங்கரின் மறைவு

# கைதிகளின் உறவுகளுக்கு பாரிய இழப்பு

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



சிரேஷ்ட சட்டத்தரணி திருமதி கௌரி சங்கரி தவராசாவின் திடீர் மரணம், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக நம்பி இருந்தவர்களுக்கு பாரிய இழப்பாகவே அமைந்துள்ளதென, பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட சட்டத்தரணி திருமதி கௌரி சங்கரி தவராசாவின் திடீர் மரணம் குறித்து அவர், நேற்று 24) விடுத்துள்ள இரங்கல் செய்தியிலேயே, இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த இரங்கல் செய்தியில், அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்றவற்றின் கீழ் கடந்த காலங்களில் கைது செய்யப்பட்டு பல வருடங்களாக சிறையில் உள்ள தமிழ் இளைஞர், யுவதிகளின் விடுதலைக்காகவும், அரசியல் கைதிகளுக்காகவும் மிக நீண்ட காலமாக செயற்பட்டு வந்த சிரேஷ்ட சட்டத்தரணி திருமதி கௌரி சங்கரி தவராசாவின் திடீர் மரணம், தமிழ் மக்களுக்கு பாரிய இழப்பு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆட்கடத்தல், காணாமல் ஆக்கப்பட்டமை, அரசியல் படுகொலைகள் உள்ளிட்ட பல்வேறு வழக்குகளுக்காக உயர்நீதிமன்றத்தில் வாதாடி, உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் பேசப்பட்ட ஒரு பிரபல சட்டத்தரணி திருமதி கௌரி சங்கரி தவராசா ஆவர் என்றும், செல்வம் எம்.பி சுட்டிக்காட்டியுள்ளார்.

என்னை அவசர கால சட்டத்தின் கீழ் கைது செய்த போது, எனது விடுதலைக்காக நீதிமன்றத்தில் வாதாடி பிணையில் செல்ல அனுமதி பெற்றுத் தந்தவர் எனத் தெரிவித்துள்ள செல்வம் எம்.பி, அவரின் இழப்பை ஈடுசெய்ய முடியாத நிலையில் உள்ளோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# "சம்பளத்தை கோர முடியாது"

■ ஏ.எம்.ஏ.பரீட்



கொவிட் நிதியத்துக்கு அரச ஊழியர்களின் சம்பளத்தைக் கோருவதை ஏற்றுக்கொள்ள முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "மருத்துவ உபகரணங்களுக்காக எமது கட்சி ஆரம்பித்துள்ள கொவிட்-19 நிதியத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மாத சம்பளத்தை வழங்க முன்வந்ததை அடுத்து எம்மைப் பின்பற்றி சுதந்திர கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் தமது சம்பளத்தை வழங்க முன்வந்தது மகிழ்ச்சியளிக்கிறது.

எனினும் இதுபோன்று அரச ஊழியர்களும் தமது பாதி சம்பளத்தை வழங்க வேண்டும் என விடுக்கும் கோரிக்கை நியாயமற்றது. இதுவரை அரச ஊழியர்களின் சம்பளமானது உயர்த்தப்படவில்லை. அத்துடன் அனைத்து அத்தியாவசிய பொருட்களினதும் விலைகளும் தற்போது உயர்வடைந்துள்ளன.

இவ்விலையேற்றத்தால் அனைத்து மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். பல அரச ஊழியர்கள் சம்பளம் பெற்று அடுத்த நாளே கடன் பெறும் சூழ்நிலையிலேயே உள்ளனர். இவ்வாறிருக்க அவர்களிடம் எவ்வாறு பாதிச் சம்பளத்தைக் கேட்க முடியும். கடந்த காலங்களில் அரசின் கொவிட்-19 நிதியத்துக்கு பல நாடுகளும் தனியார் நிறுவனங்களும் தனவந்தர்களும் நன்கொடை வழங்கினார்கள். அந்தப் பணத்துக்கு என்ன ஆனது? அதுதொடர்பான கணக்கு அறிக்கையை இன்னமும் சமர்ப்பிக்கவில்லை. இவ்வாறு இருக்க, எதை நம்பி அரச ஊழியர்கள் தமது சம்பளத்தை வழங்குவார்கள்?

அரசினது ஆடம்பர செலவுகளைக் குறைத்தால் பெரும்தொகை பணத்தை சேமிக்கலாம். எனக்கு ரோஹித ராஜபக்ஷ அனுப்பிய செயற்கை கோளே இப்போது நினைவுக்கு வருகிறது. அந்தச் செயற்கை கோளுக்கு என்ன நடந்தது என இதுவரை தெரியவில்லை. அந்தத் திட்டத்துக்கு 320 மில்லியன் செலவானதாகக் கூறப்படுகிறது" என்றார்.

### செட்டிகுளம் பிரதேச

# சுகாதார வைத்திய அதிகாரிக்கு தொற்று

■ க. அகரன்

வவுனியா, செட்டிகுளம் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிக்கு, கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

செட்டிகுளம் பிரதேசத்தில், கடந்த சில நாள்களாக கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில், குறித்த அதிகாரியின் வாகன சாரதிக்கு கடந்த 19ஆம் திகதியன்று, கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், குறித்த வைத்தியரும் பி.சி.ஆர் பரிசோதனையை முன்னெடுத்ததில், அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து, அவர் அவரது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது



# சந்திப்பு...

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜேர்மன் நாட்டை வசிப்பிடமாகக் கொண்ட வணக்கத்துக்குரிய வணபிதா அல்பிரட் மணிமாறன், நேற்றுமுன்தினம் (24) மாலை, யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருந்தார். இதன்போது, வடமாகாண பொலிஸ்மா அதிபரை சந்தித்து, வடமாகாணத்தின் தற்போதைய நிலைவரம் தொடர்பாகவும் கொரோனா வைரஸ் கட்டுப்பாடு தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது.

# தடுப்பூசி பெறாதிருப்பது தற்கொலைக்கு ஒப்பானது

■ அஸ்லம் எஸ்.மௌலானா



இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம்களின் விகிதாசாரம் சுமார் 10 சதவீதமாக இருக்கின்ற நிலையில், கொரோனாத் தொற்றால் மரணிப்பவர்களுள் சுமார் 40 சதவீதமானோர் முஸ்லிம்களாக இருப்பது கவலைக்குரிய விடயமாகும் என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், தடுப்பூசி செலுத்திக்கொள்வது பாதகமானது என்ற தவறான கருத்துகள் முஸ்லிம்கள் மத்தியில் பரப்பப்பட்டிருக்கிறது. இதனால் முஸ்லிம்கள் பலர் தடுப்பூசி பெற்றுக் கொள்ள பின்வாங்குகின்றனர். இது குறித்து சுகாதார அமைச்சும் பொலிஸ் தரப்பினரும் என்னிடம் கவலை வெளியிட்டுள்ளனர்.

உலக சுகாதார ஸ்தாபனம் உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்களால் அங்கிகரிக்கப்பட்டதே கொவிட்-19 தடுப்பூசியாகும். இதில் எவ்விதமான பாதக விளைவுகளும் இல்லை என உறுதி செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் இது விடயத்தில் எவரும் எவ்வித சந்தேகமும் அச்சமும் கொள்ளத்தேவையில்லை.

எனவே, உடனடியாக அனைத்து முஸ்லிம்களும், குறிப்பாக 60 வயதுக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் அனைவரும் தடுப்பூசியைப் பெற்று, தம்மையும் தமது குடும்பத்தினரையும் மரணத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்வதுடன் நாட்டின் சுகாதார மேம்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அன்பாய் வேண்டிக்கொள்கின்றேன் என்றார்.

# முடக்கத்திலும் முடங்காத மக்கள்

■ எச்.எம்.எம்.பர்ஸான்

நாட்டில் தற்போது தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமலில் உள்ள போதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுமக்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதாக அம் மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் நேற்று முன்தினம் (23) தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "கொரோனாத் தொற்று அதிகரித்துக் காணப்படுவதால் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தின் கட்டுப்பாடுகளை மேலும் இறுக்கமாக்கிப் பொதுமக்களை வீதிக்கு வராமல் வைக்க பல்வேறு தீர்மானங்களை எடுத்துள்ளோம்.

பொலிஸாரின் கருத்துப்படி அநேகமான அரசாங்க உத்தியோகத்தர்கள் தங்களுடைய உத்தியோகபூர்வ அடையாள அட்டையைக் காட்டி வீதிக்கு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க சகல திணைக்களத் தலைவர்களும் ஊரடங்கு அமலில் உள்ள காலப்பகுதியில் வேலைக்கு அழைக்கும் உத்தியோகத்தர்களின் பெயர் பட்டியலை உள்ளடக்கிய கடிதத்தை வழங்கவேண்டுமெனவும் அவ்வாறு அப்பட்டியலில் உள்ளடக்கப்படும் உத்தியோகத்தர்களை மாத்திரமே வெளிச்செல்ல அனுமதி வழங்கத் தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் பழைய மருத்துவச் சீட்டை காட்டி அதிகளவிலான பொதுமக்கள் வீதிக்கு வருவதாக பொலிஸார் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

இதற்கமைய காலை எட்டு மணி தொடக்கம் இரவு எட்டு மணி வரைக்கும் தான் மட்டக்களப்பில் மருந்தகங்களை திறப்பதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

இந்நேரத்தில் நோயாளிகள் தமது மருந்துத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுமாறும் அவர் தெரிவித்தார்.




# 3,000 குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள் கையளிப்பு

■ ஏ.எம்.ஏ.பரீட்

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 3,000 குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகளை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (23) திருகோணமலை, கந்தளாய் பிரதேசங்களில் இடம்பெற்றது.

ஜெர்மன் முஸ்லிம் ஹெல்பன் நிறுவனத்தின் அனுசரணையோடு இடம்பெற்ற இந்நிகழ்வினை திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயம் ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில் அம்மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்ஷன பாண்டி கோரல, மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அதுக் கோரள, கந்தளாய் பிரதேச செயலாளர், முஸ்லிம் ஜெர்மன் ஹல்பன் நிறுவனத்தின் தலைவர் சாதிக் ஹசன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

### கிணறு, மலசல கூடம் அமைக்க

# துறைசார் அமைச்சுகளுக்கு திட்டங்கள் சமர்ப்பிப்பு

■ நடராசா கிருஸ்ணகுமார்



கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி, கரந்தாய்க்குளப் பகுதியில் கிணறு, மலசல கூடம் அமைப்பதற்கான திட்டங்கள், துறைசார் அமைச்சுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனவென, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், கரந்தாய்க் குளம் ஆண்டு முழுவதும் வற்றாத நீரூற்றுடன் இருந்ததாகக் கூறினார்.

இப்பகுதியில் பிரதேச சபைக்குரிய மூன்று பரப்பு காணி உள்ளதாகத் தெரிவித்து அவர், இக்காணியில் கிணறு அமைப்பதன் மூலம் இயக்கச்சி உட்பட அயல் கிராமங்களுக்கான குடிநீர் வழங்கலை மேற்கொள்ள முடியும் எனவும் கூறினார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட இத்தாவில் போன்ற முக்கிய இடங்களில் திறந்த கிணறுகள் அமைக்கப்படுகின்றன எனத் தெரிவித்த அவர், இக்கிணறுகளில் இருந்து எதிர்காலத்தில் குடிநீர் வழங்கலை இலகுவாக மேற்கொள்ளலாம் எனவும் கூறினார்.

"அதனடிப்படையில், கரந்தாய்க் குளப் பகுதியில் கிணறு அமையுமானால் இப்பகுதிக்கான குடிநீர் வழங்கலை இலகுவாக மேற்கொள்ள முடியும். இதற்கான திட்டங்கள்தான் துறைசார் அமைச்சுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்கள் வெற்றி அடையுமானால், கரந்தாய் பகுதியில் கிணறு, மலசல கூடங்கள் பிரதேச சபையால் அமைக்கப்படும்" எனவும் தவிசாளர் தெரிவித்தார்.

### சேதனப் பசளை உற்பத்தியாளர்களுக்கான

# செப்டெம்பரில் ஊக்குவிப்பு கொடுப்பனவு

■ என்.ராஜ்

வடமாகாணத்தில், சேதனப் பசளை உற்பத்தியாளர்களுக்கான ஊக்குவிப்பு பணம், செப்டெம்பர் மாதம் நடுப்பகுதியின் பின்னர் வழங்கப்படவுள்ளதாக, வடக்கு மாகாண விவசாய திணைக்களப் பணிப்பாளர் எஸ். சிவகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், மாவட்ட மட்ட விவசாய குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட விடயங்களில், விவசாயிகள் தங்களுக்குத் தேவையான கூட்டெருவைத் தயாரித்து, அதனை விவசாய நிலங்களுக்கு போடும் போது, அவர்களது உற்பத்தி மட்டத்தை அதிகரித்து பராமரிக்க கூடியதாக இருக்கும் என்றார்.

அவ்வாறு செயற்படும் விவசாயிகளுக்கு, ஒரு ஹெக்டேயருக்கு 12 ஆயிரத்து 500 ரூபாய் அளவில் ஓர் உதவித்தொகை வழங்கப்படவுள்ளதாகத் தெரிவித்த அவர், அது சம்பந்தமான தரவுகள், கமநல சேவைத் திணைக்களத்தால் சேகரிக்கப்படுகின்றன எனவும் கூறினார்.

செப்டம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் குறித்த நடவடிக்கைகள் பூர்த்தியாகுமெனத் தெரிவித்த அவர், அதன் பின்னர், அவர்களுக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன எனவும் கூறினார்.

குறிப்பாக, கமநல சேவைகள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் இந்த வேலைத்திட்டத்துக்கு, வடக்கு மாகாண விவசாய திணைக்களமும் ஒத்துழைப்பு வழங்கிவருகின்றது சிவகுமார் தெரிவித்தார்.




### சலுகை இல்லாதவர்களுக்கே கொடுப்பனவு:

# 8,700 குடும்பங்கள் ரூ. 2,000 பெறத் தகுதி

■ றொசேரியன் லெம்பட்

மன்னார் மாவட்டத்தில், 2,000 ரூபாய் கொடுப்பனவு எந்தவோர் அரச சலுகைகளும் பெறாதவர்களுக்கு மாத்திரமே வழங்கப்படும் என, மன்னார் மாவட்டச் செயலாளர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல், நேற்று (24) தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், இந்த 2,000 ரூபாய் உதவித் தொகையானது, கர்ப்பிணித் தாய்மார்கள், சிறுநீரக நோயாளிகள், வயோதிபர் கொடுப்பனவு, ஓய்வூதிய கொடுப்பனவு, சமூர்த்தி போன்ற எந்த ஒரு கொடுப்பனவுகளும் அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளாத குடும்பங்களுக்கு மட்டும் வழங்கப்படவுள்ளது என்றார்.

இதற்காக மன்னார் மாவட்டத்தில் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு, மடு ஆகிய 5 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து 8,700 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என, அவர் மேலும் தெரிவித்தார்.

# பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 39 மில்லியன் நிதி ஒதுக்கீடு

■ எம் எஸ் எம் நூர்தீன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா ஊரடங்கினால் பாதிக்கப்பட்ட வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு 39 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அம்மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "தொழில் பாதிப்பிற்கு உள்ளான 64,382 குடும்பங்களுக்கு தலா 2,000 ரூபாய் வீதம் வழங்குவதற்கு 39 மில்லியன் ரூபாய் நிதியினை அரசு ஒதுக்கியுள்ளதாகவும், பிரதேச செயலகங்களில் இது தொடர்பான நடவடிக்கைகள் விரைவாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# காங்கேயன் ஓடையில் கைத்துப்பாக்கி மீட்பு

■ வ.சக்தி

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காங்கேயனோடையில் உள்ள வெற்றுக் காணியொன்றில் கைவிடப்பட்ட நிலையில் கைத்துப்பாக்கி மற்றும் 2 மகசின்களைக் களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் (23) கைப்பற்றியுள்ளனர்.

இந்நிலையில் கைப்பற்றப்பட்டுள்ள துப்பாக்கி மற்றும் மகசின்கள் காத்தான்குடிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு, இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா பரவலுக்கு மத்தியில்

# மோராவுக்கு பூட்டு

■ ரஞ்சித் ராஜபக்ஸ

பொகவந்தலாவை, மோரா தோட்டத்திலுள்ள தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தில் நடத்திச் செல்லப்பட்ட சகல வசதிகளுடனான கொரோனா இடைத்தங்கல் சிகிச்சை நிலையமானது, நேற்றிலிருந்து (24) மூடப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளரால், இந்த மத்திய நிலையத்தை மூடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட இந்த மத்திய நிலையத்தில், நாட்டில் பல பாகங்களைச் சேர்ந்த தொற்றாளர்களும் அனுமதிக்கபட்டு வந்ததுடன், இங்கு சுமார் 140 பேருக்கான சகல வசதிகளும் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




அத்துடன், டிக்கோயா- கிளங்கன் வைத்தியசாலையின் வைத்தியர்கள் மூவர் உள்ளிட்ட ஐவர், இங்கு கடமை புரிந்து வந்ததுடன், இராணுவத்தினரும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

எனினும், குறித்த ஐவரும் மீண்டும் கிளங்கன் வைத்தியசாலைக்கு கடமைகளுக்காக சென்றுள்ள நிலையில், பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரும் அங்கிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில், மத்திய மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் நிஹால் வீரசூரியவிடம் வினவியபோது, இந்த விடயம் குறித்து தான் அறிந்திருக்க வில்லை என்றும் கிளங்கன் வைத்தியசாலையில் வைத்தியர்கள் உள்ளிட்ட பலர் தொற்றுக்கு உள்ளாகியிருப்பதால், வைத்தியசாலையின் அலுவலக சபையின் பணியாளர்களுக்கு தட்டுபாடு ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக குறித்த இடைத்தங்கல் சிகிச்சை நிலையம் மூடப்பட்டிருக்கலாம் எனத் தான் நம்புவதாகத் தெரிவித்தார்.

அத்துடன், மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலையில் இரண்டு மாடிகளைக் கொண்ட 150 கட்டில்களுடனான முழுமையான சிகிச்சை நிலையம் ஒன்றை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு, தற்போது நிறைவடையும் தருவாயில் இருப்பதாகத் தெரிவித்தார்.

## மங்களவுக்கு இரங்கல்



கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில், தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று (24) உயிரிழந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு மலையகத் தலைவர்கள் தமது இரங்கல்களை தெரிவித்துள்ளனர். இதற்கமைய,



ஐக்கிய தேசிய கட்சியின் நீண்ட நாள் உறுப்பினரும், முன்னாள் நிதி அமைச்சருமான மங்கள சமரவீரவின் இழப்பு, அதிர்ச்சியை தந்துள்ளதுடன் அவரது இழப்பு பேரிழப்பு என இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளர்.



இலங்கை அரசியல் வரலாற்றில் என்றுமே மறக்க முடியாத ஓர் அரசியல்வாதியாகத் திகழ்ந்தவர் முன்னாள் அமைச்சர் அமரர் மங்கள சமரவீர. அவருடைய மறைவு என்றுமே ஈடு செய்ய முடியாத ஓர் இழப்பாகும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.



முன்னாள் நிதி அமைச்சரும் கடந்தகால அரசாங்கங்களில் பல்வேறு முக்கிய பதவிகளையும் வகித்திருந்த சிரேஷ்ட அரசியல்வாதி மங்கள சமரவீரவின் திடீர் மறைவானது, ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.



இதேவேளை, இலங்கை அரசாங்கத்தில் பல முக்கிய பதவிகளை வகித்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் திடீர் மறைவானது ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்தி உள்ளதென தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி நிதிச் செயலாளரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான சோ. ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

கேகாலை மாவட்டத்தில் கொரோனா விழிப்புணர்வு

## வேலைத்திட்டம் முன்னெடுப்பு

■ என்.ஆராச்சி



கேகாலை மாவட்டத்தில் அனைத்து பொலிஸ் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில், கொரோனா தொற்று தொடர்பான தெளிவுபடுத்தல் நடவடிக்கையொன்று நேற்று (24) முன்னெடுக்கப்பட்டது.

பெரண்டினா நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்ட இந்நிகழ்வில், கொரோனா தொற்றிலிருந்து பாதுகாத்தல், தடுப்பூசியின் முக்கியதுவம் குறித்து தெளிவுபடுத்தப்பட்டது.

குறித்த தெளிவுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டம் தற்போது, புளத்கொஹுபிட்டிய, வரகாபொல, யட்டியாந்தோட்டை, தெதிகம ஆகிய பொலிஸ் பிரிவுகளில் முன்னெடுக்கப்பட்டு உள்ளதுடன், எதிர்வரும் நாள்களில் தெரணியகல, ருவன்வெல்ல, மாவனெல்ல, ஹெம்மாத்தகம, ரம்புக்கன ஆகிய பொலிஸ் பிரிவுகளிலும் ஆரம்பிக்கப்படும் என பெரண்டினா நிறுவனத்தின் கேகாலை மாவட்ட சமூக அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர் சந்தன குமார தெரிவித்துள்ளார்.

## மருத்துவ உபகரணங்கள் அன்பளிப்பு...







நாவலப்பிட்டி மாவட்ட ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஜானக சோமரத்னவிடம், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் நுவரெலியா மாவட்ட செயலாளர் மஞ்சுள சுவவீர ஆராய்ச்சியால், 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான கொவிட்-19 சிகிச்சை உபகரணங்கள் நேற்று (24) கையளிக்கப்பட்டன.( எம். கிருஸ்ணா)

ஹட்டனில் பல இடங்களில் சோதனை

## பழையதுக்கு எச்சரிக்கை

■ கே.சுந்தரலிங்கம்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை மீறி பயணம் செய்வோரைக் கைது செய்வதற்காக, நேற்று (24) காலை முதல் ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல இடங்களில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கமைய, ஹட்டன், மல்லியப்பு சந்தி, மணிக்கூட்டு கோபுர சந்தி, டிக்கோயா, அளுத்கம உள்ளிட்ட பல இடங்களில் திடீர் சோதனைகளை பொலிஸார் மேற்கொண்டனர்.

இதன்போது, அத்தியவசியமற்ற தேவைக்காக சென்ற வாகனங்கள் மற்றும் பொது மக்கள் கடும் எச்சரிக்கையின் பின்னர் திருப்பி அனுப்பப்பட்டனர்.

குறித்த சோதனை நடவடிக்கையின் போது, வாகன அனுமதிப் பத்திரம், சாரதி அனுமதி பத்திரம், பயணிப்பதற்கான அனுமதி பத்திரங்கள் சோதனை செய்யப்பட்டன.

இதன் போது, ஒரு சிலர் காலாவதியான அனுமதி பத்திரங்களை வைத்துக்கொண்டு பயணிப்பது கண்டுப்பிடிக்கப்பட்டதுடன், அவ்வாறான நபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்போவதாக பொலிஸார் எச்சரித்துள்ளனர்.



சூடம் ஏற்றி அம்மனின் நகைகளை சூறையாடிய

## இருவர் கைதாகினர்

■ ஆ.ரமேஸ்




இராகலை, கோனபிட்டிய, விராலிகலை தோட்டத்தில் கரகம் பாலிக்கும் ஆலய அம்மன் சிலைக்கு அணிவித்திருந்த, தங்க நகைகளை கொள்ளையிட்ட நபர்கள் இருவர், இராகலை பொலிஸாரால் நேற்று முன்தினம் (23) மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரும், விராலிகலை தோட்டத்தை சேர்ந்தவர்கள் என்றும்

சந்தேகநபர்கள், தாம் களவாடிய நகைகளை இருவேறு நகை அடகு பிடிக்கும் இடங்களில் அடகு வைத்து, பணம் பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

வறுமை காரணமாக தாம் நகைகளைத் திருடியதாகவும், திருடுவதற்கு முன்னர், அம்மனுக்கு சூடம் ஏற்றி மன்னிப்பு கேட்ட பின்பே நகைகளைத் திருடியதாகவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களை வலப்பனை நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்கான நடவடிக்கைகளை இராகலை பொலிஸார், மேற்கொள்வதாகவும் தெரிவித்தனர்.

## கொரோனா துளிகள்...



1. மாத்தளை மாநகர சபையின், ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர் ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன், லக்கல பிரதேச சபையின் தவிசாளருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (மஹேஸ் கீர்த்திரத்ன)
2. பசறை பொது சுகாதார பிரிவின் மீதும்பிட்டிய, பரமங்கட, பசறை ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் (23) 43 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுயள்ளது. ( நடராஜா மலர்வேந்தன்)
3. அம்பகமுவ சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட எபோட்சிலி, தரவளை கீழ் பிரிவு, ஹட்டன், பண்டாரநாயக்கபுர ஆகிய பிரதேசங்களில் 3 கொரோனா மரணங்கள் நேற்று முன்தினம் (23) பதிவாகின. ( சுதத். எச்.எம்.ஹேவா)
4. மொனராகலை மாவட்ட வைத்தியசாலையின் கொரோனா வார்டில் 30 கட்டில்களே காணப்படும் நிலையில், அங்கு தற்போது 96 தொற்றாளர்கள் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சுமணசிறி குணதிலக)
5. கொட்டகலை சுகாதார சேவை அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலிருந்து நேற்று (24) 55 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது. ( ரஞ்சித் ராஜபக்ஷ)
6. பலாங்கொடை, மாரதென்ன, தெதனகல பிரதேசத்தில், மூன்றரை வயது சிறுமியொருவர், கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளார். ( ஏ.ஏ.எம்.பாயிஸ்

நிர்வாகத்தின் புதிய நடைமுறைகளுக்கு எதிராக

## கட்டுக்கலை தோட்ட மக்கள் பணிப்பகிஷ்கரிப்பு


### ஆறாவது நாளாகவும் தொடர்கின்றது

■ சுஜிதா

மஸ்கெலியா பெருந்தோட்டக் கம்பெனிக்கு சொந்தமான தலவாக்கலை, கட்டுக்கலை தோட்ட நிர்வாகத்தின் புதிய நடைமுறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, தோட்டத் தொழிலாளர்கள் கடந்த ஆறு நாள்களாக பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுவரை தேயிலைச் செடிகளுக்கு, தொழிலாளர் ஒருவர் ஒரு நாளைக்கு 8 கலன்கள் கிருமி நாசினி தெளித்து வந்துள்ளார். ஆனால், தற்போது தொழிலாளர் ஒருவர் ஒரு நாளைக்கு 14 கலன்கள் கிருமி நாசினி தெளிக்க வேண்டும் என்ற பணிப்புரைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலேயே தொழிலாளர்கள் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர் .

அத்துடன், தோட்ட நிர்வாகத்தின் இந்த கோரிக்கையை கிருமிநாசினி தெளிக்கும் பணியில் ஈடுபடும் 9 பேரும் ஏற்க மறுத்ததால், குறித்த 9 பேரையும் தோட்ட நிர்வாகம் பணி நீக்கம் செய்துள்ளது.



எனவே, அவர்களை மீண்டும் பணிக்கு அழைக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் தொழிலாளர்கள் முன்வைத்துள்ள நிலையில், நிர்வாகம் அதனை ஏற்கமறுத்துள்ளது.

குறித்த பிரச்சினை தொடர்பில் தோட்ட நிர்வாகம் மற்றும் தோட்ட தலைவர்கள் பரஸ்பர குற்றச்சாட்டுகளை முன்வைத்து தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில், முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில், மலையக தொழிற்சங்கங்களிடம் வினவியபோது. தோட்ட நிர்வாகத்துடன் துரிதகதியில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து, நியாயமான தீர்வினை பெற்றுக் கொடுப்பதாக உறுதி அளித்தனர்.

# அசட்டையாக இருக்காதீர்கள்; வழிகாட்டல்களைப் பின்பற்றுங்கள்

நாலாபுறமும் கடலால் சூழப்பட்டிருக்கும் நமது நாட்டுக்குள், கொரோனா வைரஸ் தொற்று பரவுவதற்கு, காலந்தாழ்த்தி எடுக்கப்பட்ட தீர்மானங்களே காரணமாகும் என்றால் தவறில்லை. அதனால், முழுநாடும் பல வருடங்களாக, கொரோனா தொற்றுக்குள் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கின்றது.

உயிரைக்காப்பாற்றிக் கொள்வதற்கு, எவ்வளவு செலவுகளைச் செய்யமுடியுமான செல்வந்தப் பின்னணி இருந்தாலும், அடுத்தது என்னவெனச் சிந்திப்பதற்கு முன்னரே, கொரோனா கொன்றுவிடுகின்றது.

ஆகையால், சாதாரண குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், சுகாதார வழிக்காட்டல்களை இன்னுமின்னும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கவேண்டும். ஆக, பிரதான துறையாக இருக்கும் சுகாதாரதுறைக்குள்ளும் கொரோனா வைரஸ் புகுந்து பலரைக் கொன்றுவிட்டது; இன்னும் சிலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலைகளில் சுகாதார துறையினருக்கு பற்றாக்குறை ஏற்படுமாயின், நோயாளர்களின் பாடு திண்டாட்டமாகிவிடும். இது மரணிப்போரின் எண்ணிக்கையையும் அதிகரித்துவிடும்.

வயது வித்தியாசமின்றி கொரோனா மரணங்கள் இடம்பெறுகின்றன. பிறந்த சிசுமுதல், வயது முதிர்ந்தோர் வரையிலும் கொரோனா தொற்றால் மரணித்துகொண்டுதான் இருக்கின்றனர். ஆகையால், இரண்டு தடுப்பூசிகளையும் செலுத்திக்கொண்டுவிட்டோம்; எம்மையெல்லாம் கொரோனா வைரஸ் ஒன்றும் செய்யாதென அசட்டையாக இருந்துவிடலாகாது.

தடுக்காத தடுப்பூசியை பெற்றுக்கொள்வதில் என்ன பயன்? என நினைக்காதீர்கள். முடிந்தளவு தடுப்பூசிகள் இரண்டையும் பெற்றுக்கொள்ளுங்கள். அவ்வாறு பெற்றுக்கொண்டாலும் அசட்டையாக இருந்துவிடவேண்டாம். வழங்கப்பட்டிருக்கும் சுகாதார வழிகாட்டல்கள் அனைத்தையும் முறையாக பின்பற்றவே வேண்டும்.

மரணங்களின் எண்ணிக்கையை கேட்குமிடத்து ஒவ்வொருவரிடத்திலும் ஏதோவோர் அச்சம் சூழ்கொண்டுவிடும். இது, தேவையில்லாத சிந்தனைக்கு வித்திடும். மனதைப் போட்டுக் குழப்பிக்கொள்வதன் ஊடாக, தொற்றா நோய்கள் ஏற்படுவதற்கும் வாய்ப்புகள் உள்ளன. அதுவே, கொரோனா தொற்றுக்கு வழிசமைத்துவிடும்.

பாணிகளைப் பருகி, சட்டிகளை ஆறுகளில் போட்டுடைத்து மூட நம்பிகையை வளர்க்காது, விஞ்ஞானப்பூர்வமாகச் சிந்தித்து, மக்களின் மனங்களில் விஞ்ஞானத் தீர்வுக்கு வித்திட்டிருந்தால், அச்சத்துடன் இருக்கும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களும் கொரோனா தடுப்பூசியை செலுத்திக்கொண்டிருப்பர்.

ஒவ்வொரும் சுகாதார வழிகாட்டல்களை முறையாகப் பின்பற்றவேண்டும். இது, தங்களைப் பாதுகாத்துக்கொள்வதுடன் அருகில் இருப்பவர்களையும் குடும்பத்தினரையும் பாதுகாப்பதற்கு வழிசமைக்கும்.

அத்துடன், போஷாக்கான உணவை உட்கொள்ளவேண்டும். எங்கு திரும்பினாலும் “கொரோனா”, “கொரோனா” எனும் வசனமே காதுகளுக்குள் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கும். ஆனால், அந்தச் சிந்தனையிலிருந்தும் விடுபடவேண்டும். தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமலில் உள்ளதால், மனதுக்கு இதமானவற்றைச் செய்து, மனதைத் தைரியப்படுத்தும் ஆற்றலை வளர்த்துக்கொள்ளவேண்டும். ஆக மொத்தத்தில், வீணான மனப்பயத்தை ஏற்படுத்திகொண்டிருக்காமல், அசட்டையாகவும் இருக்காமல், விழிப்புடன் இருப்பதே, சகலருக்கும் நல்லது என்பதை மீண்டும், மீண்டும் ஞாபகமூட்டுகின்றோம்.

## தமிழ் Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

மிகவும் சிக்கனமாகவும் புத்திசாலித்தனமாகவும் வாழ்பவர்கள் எந்த நிலையிலும் அச்சப்படுவதேயில்லை.

எமது நாடு நெருக்கடியான காலத்தில் இருக்கும் போதும், சிக்கனமான வாழ்க்கை முறையால் எந்தவித இடர்களையும் களைந்து விடுகின்றனர்.

மிகவும் எளிய முறையில் சிறு தோட்டங்களை உருவாக்கிய படியே சுய தேவைகளை நிறைவு செய்கின்றனர். கீரை வகைகள், முருங்கை, முல்லை, முசுட்டை, தூதுவளை, மொசுமொசுக்கை, முடக்கொத்தான் போன்ற இலைகள் மிகச் சிறந்த நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குபவை ஆகும். மேலும் சுவையானவையுமாகும்.

எமது முன்னோர் ஒருபோதும் பசுப்பாலைக் காசு கொடுத்து வாங்குவதேயில்லை. பசுக்கள், எருதுகளை வளர்த்து வந்தார்கள். கீரை வகைகள், காய்கறி வகைகளை சுயஉழைப்பின் மூலம் உருவாக்குவதால் பஞ்சம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

குடும்ப அங்கத்தினர் அனைவரும் ஒருங்கிணைந்து மேற்சொன்ன வழிமுறைகளைக் கையாண்டமையால் உடல் வலிமை பெற்றனர். இந்த முறைமை, ஒரு பொழுதுபோக்குமாகும். நிலவளத்தை வீணடிக்கலாகாது.

பருத்தியூர் பால–வயிரவநாதன்

## கொவிட்–19க்குப் பரிகாரமாகாத
# அமைச்சரவை மாற்றங்கள்



எம்.எஸ்.எம். ஐயூப்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, கடந்த 16 ஆம் திகதி அமைச்சரவையில் சில மாற்றங்களைச் செய்தார்.

அந்த நிலையில், அமைச்சரவையில் மேலும் ஒரு மாற்றம் இடம்பெற இருப்பதாக இராஜாங்க அமைச்சர் சஷிந்திர ராஜபக்‌ஷ கூறியிருக்கிறார். “நாடு முன்னேற வேண்டுமானால், வருடாந்தம் இவ்வாறான மாற்றங்கள் இடம்பெற வேண்டும்” என்றும் அவர் கூறியிருக்கிறார். அது எவ்வாறு என்று, அவர் விளக்கவில்லை.

திங்கட்கிழமை (16) இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்துக்கான காரணத்தை, ஜனாதிபதியையும் சிலவேளை பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவையும் தவிர, எவரும் அறிந்திருப்பார்கள் எனக் கூற முடியாது.

உலகளாவிய தொற்று நோயொன்றை, நாடு எதிர்நோக்கி இருக்கும் நிலையில் மேற்கொள்ளப்பட்ட அந்த மாற்றத்தை, நாட்டில் எவரும் பெரிதாகக் கணக்கில் எடுத்தாகவும் தெரியவில்லை. அதை மக்கள், மறுநாளே மறந்துவிட்டார்கள்.

இந்த அமைச்சரவை மாற்றத்தின் போது, அதுவரை சுகாதார அமைச்சராக இருந்த பவித்ரா வன்னியாராச்சி, போக்குவரத்து அமைச்சராகவும், அதுவரை ஊடகத்துறை அமைச்சராக இருந்த கெஹெலிய ரம்புக்வெல்ல, சுகாதார அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஊடகத்துறை அமைச்சர் பதவி, அதுவரை மின்சக்தி அமைச்சராக இருந்த டலஸ் அழகப்பெருமவிடம் வழங்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சராக இருந்த காமினி லொக்குகே, இப்போது மின்சக்தி அமைச்சராக இருக்கிறார். கல்வி அமைச்சராக இருந்த பேராசிரியர் ஜீ.எல். பீரிஸூம் வெளிநாட்டமைச்சராக இருந்த தினேஷ் குணவர்தனவும் தத்தமது அமைச்சுகளை மாற்றிக் கொண்டுள்ளனர். அத்தோடு, இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்‌ஷ, அந்தப் பொறுப்புகளுக்குப் புறம்பாக அபிவிருத்தி இணைப்பு மற்றும் மேற்பார்வை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் கொவிட்-19 பெருந்தொற்றுக் கொடுமைக்கு மத்தியில், சுகாதார அமைச்சராக கெஹெலியவை நியமிக்க, அவரிடம் என்ன விசேட திறமை இருக்கிறது என்பது, நாடே அறியாத இரகசியமாகும்.

ஆளும் கட்சிக்குள் மருத்துவர்கள் பலர் இருக்கிறார்கள். அதிலும் சமூக சுகாதாரத்துறையில் பட்டம் பெற்ற சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளேயும் வைரொலொஜி என்றழைக்கப்படும் வைரஸ்களைப் பற்றிய அறிவியலைக் கற்ற பேராசிரியர் திஸ்ஸ விதாரணவும் இருக்கிறார்கள்.

பேராசிரியர் திஸ்ஸ விதாரண, 22 வருடங்களாக மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் வைரஸ்துறைப் பிரிவின் அதிபராகக் கடமையாற்றி அனுபவம் பெற்றவர். அதேபோல், அவர் உலக சுகாதார நிறுவனத்தின் வைரஸ்துறை ஆலோசகராகப் பல ஆண்டுகளாகக் கடமையாற்றியவர். இவ்வாறானவர்களை விட, சுகாதார அமைச்சராக நியமிக்க கெஹெலிய பொருத்தமானவர் என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாக இருக்கிறது.

கொரோனா வைரஸ் போன்ற வைரஸ்களால் பரவும் நோய்களைத் தடுப்பதில், சமூக சுகாதாரத்துறையும் வைரொலொஜியும் தான் முக்கியத்துவம் பெறுகின்றன. அவ்வாறிருக்க, இந்த விடயத்தில் சுதர்ஷனியையும் திஸ்ஸ விதாரணவையும் புறக்கணிக்க, ஏதாவது காரணம் இருக்கிறதா என்பது விளங்கவில்லை.

கொவிட்-19 நோய் மிக வேகமாகப் பரவி, நாடு பெரும் ஆபத்தான நிலைக்குத் தள்ளப்பட்டு இருப்பதால், சுகாதார அமைச்சராக இருந்த பவித்ராவை அப்பதவியிலிருந்து நீக்கியதாகக் கருத முடியுமா? கொவிட்-19 நோயைத் தடுப்பதற்கான நடவடிக்கைளைப் பற்றிய முடிவுகளை, பவித்ரா எடுக்கவில்லை என்பது சகலருக்கும் தெரியும். அது தொடர்பான சகல முடிவுகளும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவின் தலைமையிலான ஒரு செயலணியாலேயே எடுக்கப்படுகின்றன. அந்தச் செயலணி, நேரடியாகவே ஜனாதிபதியின் ஆலோசனைப் படியே இயங்குகிறது.

அவ்வாறாயின், பவித்ராவை ஏன் சுகாதார அமைச்சுப் பதவியிலிருந்து நீக்க வேண்டும்? ஜனாதிபதியின் ஆலோசனைப் படி இயங்கும் செயலணியின் மூலமே, இனி மேலும் கொவிட்-19 நோய் தடுப்புப் பற்றிய முடிவுகள் எடுக்கப்படுமாயின், புதிய சுகாதார அமைச்சர் கெஹெலியவால் என்ன செய்ய முடியும் என்பதும் கேள்விக்குறியே?

இலங்கை மின்சாரத்துறை, எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும் ஊழல்களின் இருப்பிடமாகவே செயற்படுகிறது. காரணம், அத்துறையைப் புரிந்து கொள்ள விஞ்ஞான அறிவு இருக்க வேண்டும். மின்னியல் பொறியியலாளரான சம்பிக்க ரணவக்க மட்டுமே, இலங்கை மின்சார சபைக்குள் இடம்பெறும் ஊழல்களை அடையாளம் கண்டு இருந்தார். ஆனால், அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷ, அவரை அப்பதவியிலிருந்து நீக்கினார்.

இந்த நிலையில், டலஸை நீக்கிவிட்டு லொக்குகேயை மின்சாரத்துறை அமைச்சராக நியமிப்பதில் என்ன பயன் இருக்கிறது? அநாவசியமாக எதிர்த் தரப்புகளை ஆத்திரமூட்டும் வகையில் எப்போதும் கருத்துத் தெரிவிக்கும் கெஹெலியவைப் பார்க்கிலும், டலஸ் ஊடகத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டமை அரசாங்கத்தின் நன்மைக்கு உகந்ததாக அமையலாம். அதை விடுத்து, அந்த மாற்றத்தாலும் மக்களுக்கு எந்தப் பயனும் இல்லை.

அரசாங்கத்துக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்திய ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையை, புதிய கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தனவால் தீர்க்க முடியாது என்பது, மிகவும் தெளிவான விடயமாகும்.

அமைச்சர் நாமல் ராஜபக்‌ஷவுக்கு புதிதாக வழங்கப்பட்டுள்ள அபிவிருத்தி இணைப்பு மற்றும் மேற்பார்வை அமைச்சின் பொறுப்பு என்ன? அவர், ஏனைய அமைச்சுகள் மூலம் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்பார்வை செய்யப் போகிறார் போலும். அவ்வாறாயின், அந்த அமைச்சுகளுக்குப் பொறுப்பான அமைச்சர்களை நீக்கிவிட்டு, அவருக்கே அந்த அமைச்சுகளையும் கொடுத்திருக்கலாமே!

உண்மையிலேயே, , சகல அமைச்சர்களும் உயர் அதிகாரிகளும் எந்தவொரு சிறிய காரியத்தைச் செய்தாலும் ஜனாதிபதியினதும் பிரதமரினதும் ஆலோசனைப் படியேதான், தாம் அதைச் செய்ததாக பகிரங்கமாக கூறத் தவறுவதில்லை.

அவ்வாறு சகல விடயங்களையும் ஜனாதிபதியின் ஆலோசனைப் படி செய்ய வேண்டிய நிலையில் அவர்கள் இருப்பதாயின், சுகாதார அமைச்சினதோ வேறு எந்தவோர் அமைச்சினதோ வெற்றிக்கோ தோல்விக்கோ, அந்த அமைச்சர்கள் பொறுப்பானவர்கள் எனக் கூற முடியாது.

இதற்கிடையே, இப்போது நாட்டுக்கு அவசியமாக இருப்பது, அமைச்சர்களின் பொறுப்புகளை மாற்றுவதல்ல; விஞ்ஞான அடிப்படையிலான அமைச்சரவையொன்றே என அத்துரலியே ரத்தன தேரர் கூறியிருக்கிறார். அது உண்மைதான். ஆனால், 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர், நாட்டில் எப்போதாவது விஞ்ஞானபூர்வமான அமைச்சரவை இருந்ததில்லை.

சம்பந்தப்பட்ட சகல துறைகளையும் ஒன்றிணைத்து, அவற்றின் பொறுப்பை அமைச்சர்களிடம் கையளிப்பதையே, விஞ்ஞான ரீதியிலான அமைச்சரவை எனக் கூறப்படுகிறது. 1977 ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஓரளவுக்கு விஞ்ஞான பூர்வமான அமைச்சரவைகள் இருந்தன.

அக்காலத்தில், நிதி, திட்டமிடல் துறைகள் ஒருவரிடமும் கல்வி, உயர் கல்வி துறைகள் ஒருவரிடமும் காணி, விவசாயம், நீர்ப்பாசனம் ஆகிய துறைகள் ஒருவரிடமும் பெருந்தெருக்கள், போக்குவரத்து துறைகள் ஒருவரிடமும் என்ற வகையில் பொறுப்புகள் வழங்கப்பட்டிருந்தன.

ஆனால், 1977 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஜே. ஆர். ஜயவர்தன காணி அமைச்சை காணி, காணி அபிவிருத்தி என்றும் கல்வித் துறையை கல்வி, உயர் கல்வி மற்றும் கல்விச் சேவைகள் என்றும் கைத்தொழில் துறையை கைத்தொழில், கிராமியக் கைத்தொழில் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி என்றும் அமைச்சுகளைப் பல கூறுகளாக பிரித்து, அமைச்சர்களுக்கு வழங்கி, அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரித்தார். அவர்தான் முதன்முதலாக, பிரதி அமைச்சர்களுக்குப் புறம்பாக இராஜாங்க அமைச்சர்களையும் நியமித்தார். அத்தோடு 25 மாவட்டங்களுக்கும் மாவட்ட அமைச்சர்கள் 25 பேரை நியமித்தார். இவ்வாறு அமைச்சர்களின் எண்ணிக்கை முதல் முறையாக நூறுக்கும் அதிகமாகியது. 1960 களில் ஒரு கட்டத்தில், இலங்கையின் அமைச்சரவையில் 12 அமைச்சர்களே இருந்தனர். அவர்களின் கீழ் 12 பிரதி அமைச்சர்களும் இருந்தனர்.

விஞ்ஞானபூர்வ அமைச்சரவை என்ற பதம் 2015 ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போதும் பொதுத் தேர்தலின் போதும் பெரிதாக பேசுபொருளாகியது. தாம் பதவிக்கு வந்தால் விஞ்ஞானபூர்வ அமைச்சரவையை நியமிப்பதாக மைத்திரியும் ரணிலும் கூறினர்.

ஆனால், அவர்கள் பதவிக்கு வந்ததன் பின்னர், சில நகைப்புக்குரிய விடயங்களும் இடம்பெற்றன. நிதி அமைச்சு ஒருவரிடமும் மத்திய வங்கி மற்றொருவரிடமும் கையளிக்கப்பட்டது. அதேவேளை, வெளிநாட்டமைச்சரிடம் இரண்டு லொத்தர் சபைகளும் கையளிக்கப்பட்டன.

பொதுவாக, எக்காலத்திலும் அமைச்சுப் பதவிகள் பொறுப்புகளாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அவை அரசியல்வாதிகளுக்கு சலுகை வழங்கும் ஒரு கருவியாகவே நோக்கப்பட்டு வந்துள்ளன.

ஓர் அமைச்சரைப் பராமரிக்க அரசாங்கம் மாதமொன்றுக்கு 75 இலட்சம் ரூபாய் செலவிடுவதாக அண்மையில் ஒரு செய்தியில் குறிப்பிடப்பட்டு இருந்தது. அவ்வாறு இருக்கத் தான் அவர்கள் கொவிட்-19 நிதியத்துக்கு தமது இந்த மாதச் சம்பளத்தை நன்கொடையாக வழங்கப் போவதாக பெரிதாகக் கூறிக் கொள்கிறார்கள். அவர்களது சம்பளம் ஒரு இலட்சம் ரூபாய்க்குக் குறைந்ததாகும்.

இன்றைய நிலையில், கொவிட்-19 நோயைக் கட்டுப்படுத்துவதும் பொருளாதார நெருக்டியை சமாளிப்பதுமே அரசாங்கத்தின் பிரதான கடமையாக இருக்கிறது. அதற்கு இந்த அமைச்சரவை மாற்றத்தால், எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை.

## கடிதங்கள்

### கைவிடப்பட்ட குளங்களை புனரமைக்குமாறு விவசாயிகள் கோரிக்கை

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு, பாண்டியன்குளம் கமநலசேவை நிலையத்தின் கீழ் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்ற குளங்களில் 10 குளங்களை, முன்னுரிமை அடிப்படையில் புனரமைத்து, அதன் கீழுள்ள வயற்காணிகளை வழங்குமாறு, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாந்தை கிழக்கு, பாண்டியன்குளம் கமநலசேவை நிலையத்தின் கீழ் உள்ள 93 வரையான குளங்களில் 44 வரையான குளங்கள் மாத்திரமே, விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஏனைய குளங்கள், யுத்த சூழ்நிலையில் நீண்டகாலமாக கைவிடப்பட்ட குளங்களாகக் காடுகள் மண்டிக் காணப்படுகின்றன.

இவ்வாறு கைவிடப்பட்டு காடுகள் மண்டிக் காணப்படும் குளங்களில் அதிகளவான குளங்களை, வனவளத்திணைக்களம் வனப்பிரதேசங்களாகக் கருதி, கையப்படுத்தியுள்ள நிலை காணப்படுகின்றது. இந்தநிலையில், கைவிடப்பட்டுக் காணப்படும் பிள்ளையார் குளம், பிரமநாதன் குளம், மணல் குளம், கூத்திமூலைக்குளம், குமுலட்டிகுளம், ஆண்டியாகுளம், பாலைக்குளம், பிள்ளையார் குளம், பிச்சன்குளம் உள்ளிட்ட 10 வரையான குளங்களையாவது புனரமைத்து, அதன் கீழான வயல் நிலங்களைத் தமக்கு வழங்குமாறு பாலைப்பாணி, சிறாட்டிகுளம், வன்னிவிளாங்குளம், மூன்றுமுறிப்பு, விநாயகபுரம் ஆகிய கிராமங்களில் வாழும் காணிகள் இல்லாத விவசாயிகள் கோரியுள்ளனர்.

மேற்படி 10 குளங்களையும் புனரமைப்பதன் மூலம் 705 ஏக்கர் நிலங்களில் 215 விவசாய குடும்பங்கள் நன்மை அடையக்கூடியதாக இருக்கும் என, மேற்படி பிரதேசங்களைச் சேர்ந்த கமக்கார அமைப்புகள் தெரிவித்துள்ளன.

யது பாஸ்கரன்




## அமைச்சரவைத் தீர்மானங்களில் சில...

**கொவிட் நிதியத்துக்கு அன்பளிப்பு செய்தல்:**

தற்போது நாட்டில் பரவி வரும் கொவிட் - 19 தொற்று நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு நல்குவதற்காகவும் கொவிட்-19 நிதியத்தை வலுப்படுத்துவதற்காகவும் அமைச்சரவை அமைச்சர்களின் ஒகஸ்ட் மாத சம்பளத்தை குறித்த நிதியத்துக்கு அன்பளிப்பு செய்வதற்கு அமைச்சரவை ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

**180 நாள்களுக்கு ஒரே தடவையில் விசா:**

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் 'இணையவழி இலத்திரனியல் சுற்றுலா விசா அனுமதிப்பத்திரம் வழங்கும் முறைமையின் (ETA)' மூலம் சுற்றுலா விசா விண்ணப்பிக்கும் செயன்முறைக்கு, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 'இலங்கை சுற்றுலா அலைபேசி செயலி (Mobile App)' யைப் பயன்படுத்தலாம்.

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு 180 நாள் வரை செல்லுபடியாகும் சுற்றுலா விசா அனுமதியை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கிகாரமளித்துள்ளது.

சார்க் நாடுகளைச் சார்ந்த சுற்றுலாப் பயணிகளுக்கு 70 அமெரிக்க டொலர்.

சார்க் அல்லாத நாடுகளைச் சார்ந்த சுற்றுலாப் பயணிகளுக்கு 85 அமெரிக்க டொலர்.

சிங்கப்பூர், மாலைதீவு, சீசெல்ஸ் நாடுகளைச் சார்ந்த சுற்றுலாப் பயணிகளுக்கு 50 அமெரிக்க டொலர். (குறித்த நாடுகளுடன் தற்போதுள்ள இருதரப்பு உடன்படிக்கைகளுக்கமைய)

**வாகனங்களின் எண்ணிக்கை:**

அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பாக கீழ்வரும் தகவல்கள் உள்ளடங்கிய அறிக்கையொன்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் அமைச்சரவையின் கவனத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டது.

அமைச்சுகள் உள்ளிட்ட அரச நிறுவனங்கள், அரச வணிக நிறுவனங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்களிடம் காணப்படும் வாகனங்கள் 82,194 ஆகும்.

அவற்றில், 76,661 வாகனங்கள் நடப்பில் இயங்குவதுடன், 5,533 வாகனங்கள் இயங்கு நிலையற்றவையாகக் காணப்படுகின்றன.

இயங்கு நிலையிலுள்ள வாகனங்களில் 33,931 வாகனங்கள் அமைச்சுகள் உள்ளிட்ட அரச நிறுவனங்களிடமும், அரச வணிக நிறுவனங்களிடம் 26,395 வாகனங்களும் மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்களிடம் 16,335 வாகனங்களும் காணப்படுகின்றன.

அவ்வாறே, அரச நிறுவனங்களிலுள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் 8,500 பேருக்கு மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டு, அவர்களின் பிரத்தியேக மோட்டார் வாகனங்களுக்கு உத்தியோகபூர்வ போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்து கொள்வதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது இயங்கு நிலையில் அல்லாத வாகனங்களில் திருத்தம் செய்யக்கூடிய வாகனங்களைத் துரிதமாக திருத்தம் செய்து பாவனைக்குட்படுத்தவும், திருத்தம் செய்ய முடியாத வாகனங்களை முறையான பெறுகைக் கோரலை பின்பற்றி தாமதிக்காமல் அகற்றுவதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

**மேலதிக நிதி வசதியைப் பெறல்:**

மிகவும் பரந்தளவிலான ஆரம்ப சுகாதார சேவைக் கட்டமைப்பு அணுகுமுறையுடன் கூடிய ஆரோக்கியமான மக்களை உருவாக்கும் நோக்கில் 'சுகாதாரத் துறையை மேம்படுத்தும் கருத்திட்டத்தை' நடைமுறைப்படுத்துவதற்காக, ஆசிய அபிவிருத்தி வங்கியால் 37.5 மில்லியன் அமெரிக்க டொலர் கடனாகவும், 12.5 மில்லியன் அமெரிக்க டொலர் அன்பளிப்பாகவும், மொத்தமாக 50 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை இலங்கைக்கு வழங்கவுள்ளது.

மேற்குறிப்பிட்ட தொகையில் 15 மில்லியன் அமெரிக்க டொலர் கொவிட்-19 நடவடிக்கைகளுக்காக தற்போது ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக, கொவிட்-19 தொற்றால் அதிகரித்து வரும் நோயாளர்களை முகாமைத்துவப்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை மேற்கொள்வதற்காக 'சுகாதாரத் துறையை மேம்படுத்தும் கருத்திட்டத்தின்' கீழ் 125 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்பாடு தெரிவித்துள்ளது. அதனை பெறுவதற்கு அமைச்சரவை அங்கிகாரமளித்துள்ளது.

**இரண்டாம் காலாண்டுக்கான முன்னேற்றம்:**

நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பாரியளவிலான அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பான கீழ்வரும் தகவல்களை நிதி அமைச்சரால் அமைச்சரவையின் கவனத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டது.

43 அமைச்சுகளின் கீழ் மொத்தச் செலவு 1,000 மில்லியன் ரூபாய்களுக்கும் அதிகமான பாரியளவிலான அபிவிருத்திக் கருத்திட்டங்கள் 319 தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

2030 ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்தப்படும் குறித்த கருத்திட்டங்களின் மொத்தப் பெறுமதி கிட்டத்தட்ட 7.1 ரில்லியன் ரூபாய்களாகும்.

இதுவரை அவற்றில் 1.75 ரில்லியன் ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டில் 745 பில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

குறித்த 319 கருத்திட்டங்களில் அரசாங்கத்தின் புதிய அபிவிருத்தி அணுகுமுறையை உறுதிப்படுத்தும் 88 கருத்திட்டங்கள் அடங்குகின்றன.

அதற்கான ஒட்டுமொத்த மதிப்பீட்டு செலவு 2.5 ரில்லியன் ரூபாய்களாவதுடன், இவ்வருடத்துக்கு கருத்திட்டங்களுக்காக 232 பில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

குறித்த கருத்திட்டங்களில், அனைவருக்கும் குடிநீர், 100,000 கிலோமீற்றர் வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், நூறு நகரங்கள் வேலைத்திட்டம், நீர்ப்பாசன செழுமை நிகழ்ச்சித்திட்டம், 'சௌபாக்கியா' உற்பத்திக் கிராம நிகழ்ச்சித்திட்டம் போன்ற வேலைத்திட்டங்களும் கொவிட்-19 தொற்று நிலைமைக்கு முகங்கொடுப்பதற்காக அரசாங்கம் ஆரம்பித்துள்ள நிகழ்ச்சித்திட்டங்களும் உள்ளடங்குகின்றன.

நாட்டில் நிலவும் கொவிட் - 19 தொற்று நிலைமையால் குறித்த கருத்திட்டங்களுக்காக முதல் அரையாண்டு காலப்பகுதியில் இலக்காகக் கொள்ளப்பட்ட செலவில் 55 சத வீதமானவை பயன்படுத்தப்பட்டுள்ளது.

**உள்ளூர் சேதன உரக் கொள்முதல்:**

பெரும் போகத்துக்குத் தேவையான சேதன உரம் உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் கொள்முதல் செய்வதற்காக, தேசிய உரங்கள் செயலகத்தின் அனுமதிப்பத்திர உரிமம் கொண்ட உள்ளூர் உர உற்பத்தியாளர்களிடம் விலைமனுக் கோரப்பட்டுள்ளது. அதற்கமைய, வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனி, கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி ஆகியவற்றுக்குத் தேவையான சேதன உரத்தை விநியோகிப்பதற்கான பெறுகைக் கோரல்கள், அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை உடன்பாட்டுக் குழுவின் பரிந்துரைக்கமைய தெரிவு செய்யப்பட்டுள்ள சேதன உர உற்பத்தியாளர்களுக்கு வழங்குவதற்காக விவசாய அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம்.

**கட்டளைகளை அங்கிகாரத்துக்கு சமர்ப்பித்தல்:**

சர்வதேச இரத்தினக்கல் வர்த்தகத்தில் இரத்தினக்கற்களுக்கு நிலவிய கேள்வி குறிப்பிடத்தக்களவு குறைவடைந்துள்ளது. அதனால், தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகார சபை இரத்தினக்கல் ஏற்றுமதி நடவடிக்கைகளின் போது அறவிடும் கட்டணத்தில் ஏதேனும் சலுகையைப் பெற்றுத்தருமாறும், விமானப் போக்குவரத்து நடவடிக்கைகள் முடக்கப்பட்டிருப்பதால் மெய்நிகர் (Online) வழியாக இரத்தினக்கல் ஏற்றுமதிகளை மேற்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்தி வழங்குமாறும் இரத்தினக்கல் தொழிற்றுறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அதற்கமைய, குறித்த கட்டணத்தை திருத்தம் செய்வதற்கும், மெய்நிகர் வழியாக இரத்தினக்கல் மற்றும் தங்காபரணங்களை ஏற்றுமதி செய்வதற்கும் வசதிகளை மேற்கொள்வதற்கு இயலுமான வகையில் கட்டளைகளை திருத்துவதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**பாராளுமன்ற அங்கிகாரத்துக்காக சமர்ப்பித்தல்:**

குடியியல் வழக்கு சட்டக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தரப்பினர் ஒருவர் அல்லது தரப்பினர்களுக்கிடையே நிகழும் அல்லது பட்டியல்படுத்தப்பட்ட சட்டத்தரணி மற்றும் சேவை பெறுநருக்கு இடையேயான அனைத்துக் கட்டணங்களும் நீதிமன்றப் பதிவாளரால் நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

இதற்கு முன்னர் குறித்த தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணத்தை சமகாலத்துக்குப் பொருத்தமான வகையில் திருத்தம் செய்வதற்குரிய குறித்த கட்டளைகளை பாராளுமன்ற அங்கிகாரத்துக்காகச் சமர்ப்பிப்பதற்கு நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

---

சென்னை

### பாலியல் குற்றச்சாட்டை மறுத்து

# ராகவன் ராஜினாமா

தமிழக பாரதிய ஜனதா கட்சியின் பொதுச் செயலாளர் பொறுப்பில் இருந்து ராஜினாமாச் செய்வதாக கே.டி ராகவன் அறிவித்துள்ளார்.

தமிழக பாரதிய ஜனதா பொதுச்செயலாளர் கே.டி.ராகவன் மீது, பாலியல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட வீடியோ, சமூக வலைத்தளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வீடியோ சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில் கே.டி. ராகவன் தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார். மேலும் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ள அவர், சட்டப்படி சந்திப்பேன் என்றும் தெரிவித்துள்ளார். இது தொடர்பான அறிவிப்பை தனது பேஸ்புக், டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.






---

சென்னை

# பா.ஜ.க ஆட்சியில் பதவிகள்

தொடர்ந்து தமிழர்களை, சிறப்பான பதவிகளில் நியமித்ததன் வாயிலாக, தமிழகத்துக்கு தான் வழங்கும் முக்கியத்துவத்தை மீண்டும் மீண்டும், பிரதமர் மோடி நிரூபித்துக் கொண்டிருக்கிறார் என, தமிழக பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

தமிழக பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் அண்ணாமலை தொடர்ந்து தெரிவிக்கையில்,

தமிழகத்தில், சமூகத்துக்காகவும் கட்சிக்காகவும் உண்மையாகவும் நேர்மையாகவும் உழைப்பவர்களை எல்லாம், பல துறைகளில் அடையாளம் கண்டு பதவி கொடுத்து, மரியாதை செய்யும் ஒரே கட்சி பா.ஜ.க தான். மேகாலயா மாநில முன்னாள் ஆளுநர் சண்முகநாதன், கேரள முன்னாள் ஆளுநர் சதாசிவம், தெலுங்கானா புதுச்சேரி ஆளுநர் தமிழிசை, மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், தற்போது, மணிப்பூர் ஆளுநராக நியமிக்கப்பட்டு இல.கணேசன் ஆகியோர் சிறப்பிக்கப்படுகிறார். தொடர்ந்து, தமிழர்களைச் சிறப்பான பதவிகளில் நியமித்ததன் வாயிலாக, தமிழகத்துக்கு தான் வழங்கும் முக்கியத்துவத்தை மீண்டும் மீண்டும், பிரதமர் மோடி நிரூபித்துக் கொண்டு இருக்கிறார் என்று அவர் கூறியுள்ளார்.



---

புதுவை

### இரவிலும் சேவை

# குவியும் பாராட்டுகள்



டுவிட்டர் மூலம் உதவி கேட்ட பெண்ணுக்கு வெண்டிலேட்டர் சிகிச்சை கிடைக்க ஏற்பாடு செய்த ஆளுநர் தமிழிசை சவுந்தர ராஜனுக்கு பாராட்டுகள் குவிகின்றன.

புதுச்சேரி ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜனின் தாயார் கடந்த சில நாள்களுக்கு முன்பு காலமானார். எனவே, அவரது இறுதிச் சடங்கு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக அவர் தற்போது சென்னையில் உள்ளார்.

இந்த நிலையில் புதுச்சேரி மகாத்மா காந்தி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவருக்கு கடந்த இரவு வெண்டிலேட்டர் உதவியுடன் கூடிய சிகிச்சை தேவைப்பட்டது.

எனவே, அந்தப் பெண்ணின் குடும்பத்தினர், இதுகுறித்து டுவிட்டர் மூலம் இரவு 9.15 மணிக்கு ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜனுக்கு கோரிக்கை விடுத்தனர். இதனை பார்த்த அவர் சுகாதாரத்துறை செயலாளர் அருணை தொடர்பு கொண்டு, அந்த பெண்ணுக்கு வெண்டிலேட்டர் உதவியுடன் கூடிய சிகிச்சை அளிக்க உத்தரவிட்டார்.

இதனை தொடர்ந்து சுகாதாரத் துறை செயலாளர் அருண் உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்தப் பெண்ணுக்கு வெண்டிலேட்டர் உதவியுடன் கூடிய சிகிச்சை கிடைக்க ஏற்பாடு செய்தார். தற்போது அந்தப் பெண்ணுக்கு அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. நள்ளிரவில் பெண்ணுக்கு வெண்டிலேட்டருடன் கூடிய சிகிச்சை கிடைக்க ஏற்பாடு செய்த ஆளுநருக்கு சமூக வலைத்தளத்தில் பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

---

சென்னை

### முறையீட்டை ஏற்க

# உயர் நீதிமன்றம் மறுப்பு

அவதூறு வழக்கை இரத்துச் செய்யக் கோரிய மனுவை அவசர வழக்காக விசாரிக்க வேண்டுமென அண்ணா திராவிட முன்னேற்ற கழக ஒருங்கிணைப்பாளர் பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி தரப்பில் முன்வைக்கப்பட்ட முறையீட்டை சென்னை உயர் நீதிமன்றம் ஏற்க மறுத்து விட்டது.

அ.தி.மு.கவில் கட்சி விதிகளுக்கு எதிராக செயற்பட்டதாகக் கூறி புகழேந்தி நீக்கப்பட்டார். அ.தி.மு.கவின் செய்தித் தொடர்பாளர் பெங்களூர் புகழேந்தியை கட்சியிலிருந்து நீக்கி ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்ச்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் உத்தரவிட்டனர். இந்த நிலையில், தனக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் அ.தி.மு.க தலைமை செயற்பட்டதாக புகழேந்தி வழக்குத் தொடுத்தார்.

நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனால் ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி ஆகியோரை அவதூறு சட்டத்தின் கீழ் தண்டிக்க வேண்டுமென்று புகழேந்தி மனு தாக்கல் செய்தார். இது தொடர்பாக சென்னை எம்.பி. எம்.எல்.ஏ. மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் அவர் வழக்கு தொடுத்து இருந்தார்.

இந்த வழக்கு விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என்று ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி ஆகியோருக்கு சம்மன் அனுப்பப்பட்டது. (ஒகஸ்ட் 24ஆம் திகதி) நேற்று நேரில் ஆஜராக வேண்டும் என்று இவர்களுக்கு உத்தரவிடப்பட்டது. இந்த அவதூறு வழக்கிற்கு எதிராக, ஓ.பன்னீர் செல்வம், எடப்பாடி பழனிச்சாமி ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தனித்தனியே மனுத்தாக்கல் செய்துள்ளனர்.



---

சென்னை

### பழனிசாமி, சசிகலா, இளவரசி மீது

# மனுத் தாக்கலால் பரபரப்பு

கோடநாடு கொலை, கொள்ளை வழக்கில் முன்னாள் முதமைச்சர் எடப்பாடி பழனிசாமி, சசிகலா, இளவரசி உள்ளிட்டோரை விசாரிக்கக் கோரி, சென்னை உயர்நீதிமன்றத்தில் புதிய மனுத் தாக்கல் செய்யப்பட்டிருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் கோடநாடு எஸ்டேட்டில் நள்ளிரவில், ஓம் பஹதூர் என்ற பாதுகாவலரை கொலை செய்து, ஆவணங்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

இதற்கான வழக்கு தொடர்பாக, நீலகிரி அமர்வு நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது. இந்நிலையில் இந்த வழக்கில் முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, சசிகலா, இளவரசி, சுதாகரன், நீலகிரி முன்னாள் ஆட்சியர் சங்கர், முன்னாள் எஸ்.பி முரளி ரம்பா, அ.தி.மு.க நிர்வாகி சஜீவன், கோடநாடு எஸ்டேட் மேலாளர் நடராஜன், சுனில் ஆகியோரை விசாரிக்க அனுமதி கோரி, வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட தீபு, சதீசன், சந்தோஷ் சாமி ஆகியோர் நீலகிரி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தனர்.

இந்த மனுவை விசாரித்த நீலகிரி நீதிமன்றம், எஸ்டேட் மேலாளர் நடராஜனை மட்டும் விசாரிக்க அனுமதியளித்ததுடன், மற்றவர்களை விசாரிக்க கோரிய மனுவை தள்ளுபடி செய்து, கடந்த ஏப்ரலில் உத்தரவிட்டது. இந்த உத்தரவை ரத்து செய்யக் கோரி தீபு, சதீசன், சந்தோஷ் சாமி ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மறு ஆய்வு மனுவை தாக்கல் செய்துள்ளனர்.



---

சென்னை

# முதலமைச்சர் மன்னிப்புக் கேட்டார்

சட்டசபையில், நிதி அமைச்சர் தியாகராஜன், வார்த்தையை தவறாக பயன்படுத்தியதற்கு, முதலமைச்சர் ஸ்டாலின் மன்னிப்புக் கேட்டார்.

சட்டசபையில், நீர்வளத்துறை மானிய கோரிக்கை மீதான விவாதம் நேற்று நடந்தது. இதில், அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் சார்பில், முனுசாமி பேசுகையில், "தி.மு.க., தேர்தல் அறிக்கையில் பெற்றோல் விலை லிற்றருக்கு 5 ரூபாய், டீசல் 4 ரூபாய் குறைக்கப்படும் என, அறிவிக்கப்பட்டது. ஆனால், பெற்றோல் விலை ஒரு ரூபாயால் குறைக்கப்பட்டது" என்றார். உடன், குறுக்கிட்ட நிதி அமைச்சர் தியாகராஜன், அ.தி.மு.க ஆட்சியில் ஐந்து முறை பெற்றோல், டீசல் விலை உயர்த்தப்பட்டது. ஒருமுறை கூட குறைக்கப்படவில்லை" என்றார். தொடர்ந்து பேசுகையில், ஒரு வார்த்தையை அவர் பயன்படுத்தினார். அந்த வார்த்தையை, சபை குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என, அ.தி.மு.கவினர் கேட்டனர். அப்போது எழுந்த எதிர்க்கட்சி தலைவர் பழனிசாமி, நிதி அமைச்சர் தியாகராஜனை தனிப்பட்ட முறையில் விமர்சிக்கும் வகையில், ஒரு கருத்தை கூறினார். மீண்டும் எழுந்த தியாகராஜன், "தனிநபரைப் பற்றி நான் கூறவில்லை. திசைதிருப்பும் வகையில், எதிர்க்கட்சி தலைவர் பேசுகிறார். யாரையும் நான் அவமதிக்கவில்லை" என்றார். அப்போது எழுந்த முதலமைச்சர் ஸ்டாலின், "நிதி அமைச்சர் விளக்கம் சொல்லும் போது, 'அதைச் சொல்வதற்கு உங்களுக்கு என்ன தகுதி இருக்கிறது' எனக் கேட்டிருக்க வேண்டும். அவர் வார்த்தையை மாற்றிக் கூறியதற்கு, உள்ளபடியே வருத்தப்படுகிறேன். அந்த வார்த்தையை சபை குறிப்பில் இருந்து நீக்க வேண்டும்" என்றார்.

---

புதுடெல்லி

### தொடரும் விவசாயிகளின் போராட்டத்தால்

# போக்குவரத்துப் பிரச்சினை

விவசாயிகள் போராட்டத்தால் ஏற்படும் போக்குவரத்து பிரச்சினைகளுக்கு மத்திய மற்றும் புதுடெல்லியின் அண்டை மாநில அரசாங்கங்கள் தீர்வு காண வேண்டுமென, உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மத்திய அரசாங்கம் கொண்டு வந்துள்ள மூன்று விவசாய சட்டங்களை எதிர்த்து, புதுடெல்லி எல்லையில் விவசாய அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் ஒன்பது மாதங்களாகப் போராட்டம் நடத்தி வருகின்றனர். போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் சாலைகளில் தடுப்புகளை ஏற்படுத்தி மறியல்களில் ஈடுபடுவதால் புதுடெல்லி எல்லைகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. உத்தரப் பிரதேச மாநிலம் நொய்டாவைச் சேர்ந்த மோனிகா அகர்வால் என்பவர் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், 'விவசாயிகள் போராட்டத்தால் புதுடெல்லியின் எல்லைகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதனால் எல்லையை ஒட்டியுள்ள ஹரியானா, உத்தர பிரதேச மாநில பகுதிகளுக்கு செல்ல முடிவதில்லை. போக்குவரத்து நெரிசல் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்' எனக் குறிப்பிட்டிருந்தார். இந்த மனு தொடர்பாக மத்திய அரசாங்கம், உத்தரப் பிரதேசம், ஹரியானா மாநில அரசாங்கங்களுக்கு உச்ச நீதிமன்றம் 'நோட்டீஸ்' அனுப்பியது. இந்த மனு விசாரணைக்கு வந்தது. போராட்டம் நடத்த விவசாயிகளுக்கு முழு உரிமை உள்ளது. ஆனால் அதற்கான இடங்களில் தான் போராட்டம் நடத்த வேண்டுமென நீதிபதிகள் கூறினர்.



பிலிப்பைன்ஸ்

# உப ஜனாதிபதி பதவிக்கு ஜனாதிபதி போட்டி

பிலிப்பைன்ஸின் அடுத்தாண்டு தேர்தல்களில், ஆளுங் கட்சியான பி.டி. பி-லபானின் உப ஜனாதிபதி வேட்பாளராக இருக்க பிலிப்பைன்ஸின் ஜனாதிபதி றொட்றிகோ டுட்டர்ட்டே இணங்கியுள்ளார்.

இதுதொடர்பில், கட்சியின் நிறைவேற்று உப தலைவரான கார்லோ நொக்ரலெஸ் அறிக்கையொன்றின் ஊடாக தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸில் போதைப்பொருளுக்கு எதிரான ஜனாதிபதி டுட்டர்ட்டேயின் யுத்தம் காரணமாக, பதவிக் காலம் முடிவடைந்த பின்னர் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை அவர் எதிர்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.




இந்நிலையிலேயே, ஜனாதிபதி டுட்டர்ட்டேயின் குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

பிலிப்பைன்ஸின் அரசியலமைப்பின்படி ஒரு தடவை மாத்திரமே ஜனாதிபதியாக இருக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. அந்தவகையில், தனது மகளை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த ஜனாதிபதி டுட்டர்ட்டே முயலுகின்றமை குறிப்பிடத்தக்கது.

முன்னர் ஜனாதிபதி டுட்டர்ட்டேயின் ஆதரவாளராக இருந்த குத்துச்சண்டை வீரரான செனட்டர் மனி பக்காயோவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்னர் பக்காயோ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஜனாதிபதி டுட்டர்ட்டே ஆதரவளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தான்

## ஆப்கானிஸ்தானுக்கு ஈரான் எண்ணெய்

ஆப்கானிஸ்தானுக்கு எண்ணெய் ஏற்றுமதிகளை சில நாள்களுக்கு முன்னர் ஆரம்பித்துள்ளது என ஈரானிய அதிகாரி ஒருவர் றொய்ட்டர்ஸுக்குத் தெரிவித்துள்ளார். புதிய அரசாங்கத்தின் கோரிக்கை ஒன்றைத் தொடர்ந்தே இவ்வாறு ஏற்றுமதிகளை ஈரான் மீள ஆரம்பித்துள்ளது.

தலிபான்கள் சுன்னி முஸ்லிம்கள் என்ற நிலையில், ஈரானில் ஆளும் வர்க்கமானது ஷியா முஸ்லிம்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நகரங்களிலிருந்து பல ஆப்கானிஸ்தானியர்கள் வெளியேறுகின்ற நிலையில், பெற்றோலின் விலையானது தொன் ஒன்றுக்கு 900 ஐக்கிய அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

இதைக் கட்டுப்படுத்தவே வியாபாரிகளுக்கு எல்லைகளைத் திறக்குமாறு தலிபான்கள் கோரியுள்ளனர்.

தவிர, எரிபொருள் இறக்குமதிகளுக்கான வரிகளையும் தலிபான்கள் நீக்கியுள்ளனர்.




சிரியா

## எதிரணி இடத்தை தாக்கிய இராணுவம்

தென் சிரிய எல்லை நகரமான டெராவிலுள்ள எதிரணியிடமான டெரா அல் பலாட் மீது ஈரானிய ஆதரவு ஆயுதக் குழுக்களின் உதவியுடன் சிரிய இராணுவப் பிரிவுகள் பாரிய தாக்குதலை நடத்தியதாக, அங்குள்ளவர்களும் இராணுவமும் எதிரணித் தகவல் மூலங்களும் தெரிவித்துள்ளன.

தென் சிரியாவிலுள்ள எதிரணியின் இறுதிப் பலம் வாய்ந்த இடமான குறித்த இடத்தைக் கைப்பற்றும் நோக்கிலேயே இத்தாக்குதலை இராணுவம் தொடுத்துள்ளது.

குறித்த இடத்திலிருந்தே அசாட் குடும்ப ஆட்சிக்கு எதிராக கடந்த 2011ஆம் ஆண்டு முதலாவது ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகி பின்னர் சிரியா முழுவதும் பரவியிருந்தது.

இந்நிலையில், மேற்குப் புறத்திலிருந்து தாங்கள் தாக்குதலை முறியடித்ததாக எதிரணிப் போராளிகள் கூறியுள்ளனர். இந்த மேற்குப் புறமானது கடந்த இரண்டு மாதமாக முற்றுகைக்கு கீழ் உள்ளது. அந்தவகையில், உணவு, மருத்துவ, எரிபொருள் விநியோகங்களை இராணுவம் தடுத்தபோதும், பொதுமக்கள் வெளியேற பாதை ஒன்றை திறந்துள்ளதாக அங்குள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.



துனீஷியா

# ஜனாதிபதி அதிரடி



மறு அறிவித்தல் வரையில் பாராளுமன்றத்தின் இடைநிறுத்தத்தை துனீஷிய ஜனாதிபதி கைஸ் சைட் நீடித்துள்ளதாக தூனீஷிய ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

தனது பிரதமரை கடந்த மாதம் நீக்கிய பின்னர் நிறைவேற்று அதிகாரத்தை ஜனாதிபதி சைட் கையில் எடுத்திருந்தார். இதை ஆட்சிக் கவிழ்ப்பு என எதிரணியினர் வர்ணித்திருந்தனர்.

இந்நிலையில், பாராளுமன்ற உறுப்பினர்களின் சட்டவிலக்கையும் நேற்று முன்தினம் ஜனாதிபதி சைட் நீடித்துள்ளதாக அவரது அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது.

இது தவிர, தேசத்துக்கு எதிர்வரும் நாள்களில் ஜனாதிபதி சைட் உரையாற்றுவார் எனத் தெரிவித்த ஜனாதிபதி சைட்டின் அலுவலகம், மேலதிக தகவல்கள் எதனையும் வழங்கியிருக்கவில்லை.

இதுவரையில் புதிய பிரதமர் ஒருவரை ஜனாதிபதி சைட் பெயரிடவோ அல்லது வேறு எதுவும் திட்டங்களையோ ஜனாதிபதி சைட் அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தான்

### மூன்று மாவட்டங்களைக் கைப்பற்றியதை அடுத்து

# பன்ஜ்ஷிருக்கு அருகில் தலிபான்

வட ஆப்கானிஸ்தானில் மூன்று மாவட்டங்களை மீளக் கைப்பற்றியதை அடுத்து பன்ஜ்ஷிர் பள்ளத்தாக்குக்குக்கு அருகில் தலிபான்கள் நிலை கொண்டுள்ளதாக தலிபான் பேச்சாளர் ஸபிஹுல்லாஹ் முஜாஹித் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரமே இம்மாவட்டங்கள், உள்ளூர் ஆயுதக் குழுக்களிடம் வீழ்ந்திருந்தன.

எவ்வாறெனினினும், மேலதிக மோதல் இடம்பெற்றதாக உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் எவையும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், அமைதியாக பிரச்சினைகளைத் தீர்க்க முயல்வதாக முஜாஹித் கூறியுள்ளார்.



### மூன்றாவது டெஸ்ட் இன்று ஆரம்பிக்கிறது:

# தோல்வியிலிருந்து மீளுமா இங்கிலாந்து?

இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியானது, லீட்ஸில் இலங்கை நேரப்படி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

இத்தொடரின் முதலாவது போட்டியானது வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததுடன், இரண்டாவது போட்டியில் இந்தியா வென்று தொடரில் முன்னிலை வகிக்கின்ற நிலையில், தொடரில் ஆதிக்கம் செலுத்துவதற்கு துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து பாரியளவு முன்னேற்றத்தைக் காண்பிக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக இங்கிலாந்தின் அணித்தலைவர் ஜோ றூட் தவிர, ஜொனி பெயார்ஸ்டோ, ஜொஸ் பட்லர், றோறி பேர்ண்ஸ் ஆகியோர் தொடர்ச்சியான பெறுபேறுகளை வெளிக்காட்ட வேண்டியுள்ளதுடன், ஹசீப் ஹமீட், டேவிட் மலன் ஆகியோர் தமது மீள் தேர்வுகளை நியாயப்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

இதுதவிர, கடந்த இரண்டு போட்டிகளிலும் பிரகாசித்திருக்காத சாம் கர்ரன், தனது முக்கியத்துவத்தை அணியில் இடம்பெற்றால் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது.

இந்நிலையில், மார்க் வூட் காயமடைந்துள்ள நிலையில் அவரை சஹிப் மஹ்மூட் பிரதிடுவார் என எதிர்பார்க்கப்படுவதோடு, சாம் கர்ரனை




கிரேய்க் ஒவெர்ட்டன் பிரதியிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மறுபக்கமாக இந்தியாவின் அணித்தலைவர் விராட் கோலி, உப அணித்தலைவர் அஜின்கியா ரஹானே, செட்டேஸ்வர் புஜாரா ஆகியோரை உள்ளடக்கிய மத்தியவரிசையானது விரைவில் போர்முக்குத் திரும்ப வேண்டியுள்ளது.

## ஆப்கானிஸ்தான் எதிர் பாகிஸ்தான் தொடர் ஒத்திவைப்பு

பாகிஸ்தானுக்கு எதிரான ஆப்கானிஸ்தானின் ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரானது காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு ஆப்கானிஸ்தான் வருவது கடினம், ஆப்கானிஸ்தானின் தற்போதைய நிலைமை காரணமான நல்ல உளநலனில் ஆப்கானிஸ்தான் வீரர்கள் இல்லை என ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை, பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கிடையிலான பேச்சுக்களில் முடிவானதையடுத்தே தொடர் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இத்தொடரை அடுத்தாண்டு நடாத்துவதற்கு இரண்டு கிரிக்கெட் சபைகளும் முயல்வதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை டுவீட் செய்துள்ளது.



### இங்கிலாந்து பிறிமியர் லீக்:

## வெஸ்ட் ஹாமிடம் தோற்றது லெய்செஸ்டர்



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், வெஸ்ட் ஹாம் யுனைட்டெட்டின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில், 1-4 என்ற கோல் கணக்கில் லெய்செஸ்டர் சிற்றி தோற்றது.

லெய்செஸ்டர் சார்பாகப் பெறப்பட்ட கோலை யூரி டிலிமான்ஸ் பெற்றதோடு, வெஸ்ட் ஹாம் சார்பாக, மிஷைல் அந்தோனியோ இரண்டு கோல்களையும், பப்லோ பொர்னல்ஸ், சைட் பென்ரஹ்மா ஆகியோர் தலா ஒவொரு கோலையும் பெற்றனர்.

### தொடரைச் சமப்படுத்துவதற்கு இறுதி நாளில்

# பாகிஸ்தானுக்கு 9 விக்கெட்டுகள் தேவை

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரைச் சமப்படுத்துவதற்கு தொடரின் இறுதி நாளில் ஒன்பது விக்கெட்டுகளை பாகிஸ்தான் கைப்பற்ற வேண்டியுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் மே. தீவுகள் வென்ற நிலையில், ஜமைக்காவில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்த இந்த இரண்டாவது டெஸ்டில் வென்றால்தான் தொடரை பாகிஸ்தான் சமப்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.



ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

பாகிஸ்தான்: 302/9 (துடுப்பாட்டம்: பவாட் அலாம் ஆ.இ 124, பாபர் அஸாம் 75, மொஹமட் றிஸ்வான் 31, பாஹீம் அஷ்ரஃப் 26, ஷகீன் ஷா அஃப்ரிடி 19 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேடன் சியல்ஸ் 3/31, கேமார் றோச் 3/68, ஜேஸன் ஹோல்டர் 2/46)

மே. தீவுகள்: 150/10 (துடுப்பாட்டம்: என்குருமாஹ் பொன்னர் 37, ஜேர்மைன் பிளக்வூட் 33, ஜேஸன் ஹோல்டர் 26, றொஸ்டன் சேஸ் 10 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷகீன் ஷா அஃப்ரிடி 6/51, மொஹமட் அப்பாஸ் 3/44, பாஹீம் அஷ்ரஃப் 1/14)

பாகிஸ்தான்: 176/6 (துடுப்பாட்டம்: இம்ரான் பட் 37, பாபர் அஸாம் 33, அபிட் அலி 29, அஸார் அலி 22, ஹஸன் அலி 17, மொஹமட் றிஸ்வான் ஆ.இ 10, பாஹீம் அஷ்ரஃப் 09 ஓட்டங்கள். பந்துவீச்சு: அல்ஸாரி ஜோசப் 2/24, ஜேஸன் ஹோல்டர் 2/27, கிரேய்க் பிறத்வெய்ட் 1/28, கைல் மேயர்ஸ் 1/43)

மே. தீவுகள்: 49/1 (துடுப்பாட்டம்: கிரண் பவல் 23, கிரேய்க் பிறத்வெய்ட் ஆ.இ 17, அல்ஸாரி ஜோசப் ஆ.இ 08 ஓட்டங்கள்)

# ஆரம்பித்த டோக்கியோ 2020 பரா ஒலிம்பிக்

ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் 16ஆவது பரா ஒலிம்பிக் போட்டிகளானவை நேற்று ஆரம்பித்திருந்தன.

அடுத்த மாதம் ஐந்தாம் திகதி வரை நடைபெறவுள்ள இப்போட்டிகளில் 163 தேசங்களைச் சேர்ந்த 4,537 வீரர்கள் பங்கேற்கின்றனர். இதில், 22 வகையான விளையாட்டுக்களில் இருந்து 539 நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

கடந்தாண்டு நடைபெறவிருந்து கொரோனா பரவலால் ஒத்தி வைக்கப்பபட்ட இப்போட்டிகள் இம்முறை பார்வையாளர்கள் இல்லாமலே இடம்பெறவுள்ளன.




இம்முறை பூப்பந்தாட்டமும், டேக்வூன்டோவும் அறிமுகப்படுத்தப்பட்டு படகோட்டம், ஏழு நபர் கொண்ட கால்பந்தாட்டத்தைப் பிரதியிடவுள்ளன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 25 ஒகஸ்ட் 2021, இல. 8, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.